
தமிழரசு
1-10-1978 50 காசு.

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

– அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

ஜெய்...

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.



"பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர்.

ஆனாலும் எப்படியோ மனிதச் சமுதாயத்தின் அறியாமையால், நமது வாழ்க்கை முறையில் புரையோடிய கொடுமையாகத் தீண்டாமைப் பழக்கம் வேரூன்றிவிட்டது. மனிதனை மனிதன் தள்ளி வைப்பது ஒரு வெறியாய்ப் போய்விட்டது. அண்ணல் காந்தியடிகள் தீண்டாமைக் கொடுமை நாட்டையே பாழ்படுத்திவிட்டதை உணர்ந்து, அந்தத் தீயப் பழக்கத்தை அடியோடு களைய வேண்டும் என்பதற்கு அயராது பாடுபட்டார்.

பள்ளிப் பருவத்தில் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஒரு பையனுடன் காந்தி விளையாடினார். இதை அவரது அன்னை புத்லிபாய் தடுத்தார். தன் தாய் சொல்வதைத் தட்டாது கேட்கும் காந்தி, இதில் மட்டும் தாய் சொல்லுக்குக் கீழ்ப்படியவில்லை.

# ஆண்டவனின் குழந்தைகள்

பின்னர் ஒருமுறை காந்தியடிகள் இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்: 'நானும் என் சகோதரர்களும் எந்தத் தீண்டப்படாதவரையும் தொட்டுவிட்டால், எங்கள் தாய், எங்களைத் தலை முழுகச் சொல்லுவார். அப்பொழுது எல்லாம் நான் சிரிப்பது வழக்கம்' என்று.

தமிழரசு

1-10-78

மலர் 9 ✻ இதழ் 7

இப்படி இளமையிலேயே தீண்டாமையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற உறுதியுடன் காந்தியடிகள் இருந்தார். தென்னாப்பிரிக்காவிலேகூட தீண்டாதோருடன்தான் காந்தியடிகள் கூட்டுறவு கொண்டார். தீண்டாதாரின் நிலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன் காந்தியடிகள் செயல்பட்டார்.

தீண்டாதோர் நல்வாழ்வுக்காக 1918-ல் பம்பாயில் ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்துக் காந்தி சென்றார். பேசுவதற்காக எழுந்த அவர், 'இந்தக் கூட்டத்தில் யாராவது தீண்டாதோர் இருக்கிறாரா?' என்று கேட்டார். எவரும் கையைத் தூக்கவில்லை. காந்தி பேச மறுத்துவிட்டார்.

அகமதாபாத்துக்கு அருகில் இருந்த காந்தியின் ஆசிரமத்துக்குத் தீண்டாதோரின் குடும்பம் ஒன்று வந்தது. ஆசிரமத்திலே நிரந்தர மக்களாகத் தங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியே அவர்களைக் காந்தி சேர்த்துக் கொண்டார்.

இதனால் ஆசிரமத்தில் பெரும் நெருக்கடி எழுந்தது. தீண்டத் தகாத வகுப்பைச் சேர்ந்த தந்தையையும் தாயையும் அவர்களுடைய மகள் லட்சுமியையும் ஆசிரமத்திலுள்ள பெண்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்கள்.

தானிபென் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பு பெண் அடுக்களையில் புகுந்து உணவு சமைப்பதும், பாத்திரம் பண்டங்களைத் துலக்குவதும் கஸ்தூரிபாவுக்குப் பிடிக்கவில்லை. காந்தியடிகளிடம் முறையிட்டார்.

காந்தியடிகளின் பிடிவாதம் அன்னை கஸ்தூரிபாவுக்கு நன்கு தெரியும். முடிவில் காந்தியடிகளுக்கே வெற்றி.

பின்னர், ஒருநாள் காந்தி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த லட்சுமியைத் தம் சொந்த மகளாக சுவீகாரம் செய்து கொண்டார்.

''பண்டைக்கால இந்து மதத்தில் தீண்டாமை இல்லை. சதுப்பு நிலத்தில் எழும் விஷவாயு (மையாஸ்மா) போன்றது தீண்டாமை. அவை இந்து மதத்தின் தத்துவங்களுக்கு எதிரானவை ஆகும். நான் மறுபிறவி எடுக்க விரும்பவில்லை. ஆனால், தவறி மறுபிறவி எடுப்பதானால் ஒரு தீண்டப்படாதவனாகவே பிறக்க விரும்புகிறேன். அப்படிப் பிறந்து, அவர்களுடைய துயரங்களையும் துன்பங்களையும் அவர்கள்மீது மற்றவர் சொரியும் அவமதிப்புக்களையும் நானும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். என்னையும் விடுவித்துக் கொண்டு அவர்களுடைய துன்பநிலைகளிலிருந்து அவர்களையும் விடுவிக்க முயல இதன் மூலம் எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டும்''-என்றார் காந்தியடிகள்.

அடுத்த பிறவியில் தாழ்த்தப்பட்டவராக மாறுவதற்கு முன்பே இந்தப் பிறவியிலேயே அத்தகையவராக வாழ காந்தியடிகள் முயன்றார். ஆசிரமக் கழிப்பறைகளைத் தாமே சுத்தம் செய்யும் வேலைகளை காந்தியடிகள் மேற்கொண்டார். அதன் விளைவாக எல்லாருமே அப்பணிகளை மேற்கொண்டார்கள். இதனால் அந்த வேலை செய்பவர்கள் தீண்டத்தகாதவர் என்ற எண்ணம் அங்கு எழவில்லை.

தாழ்த்தப்பட்டவர்களை, தீண்டாதோர், பறையர் என்றெல்லாம் குறிப்பிட்டு வந்தார்கள். காந்தியடிகள் தீண்டப்படாத மக்களை 'ஹரிஜன்' அதாவது 'ஆண்டவனின் குழந்தைகள்' என்று அழைத்தார். பின்னர், தமது வாரப் பத்திரிகைகளுக்கு இந்தப் பெயரையே வைத்தார். இந்த 'ஹரிஜன்' என்ற சொல்லைக் கால வழக்கில் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

காந்தியடிகள் தீண்டாமை அடியோடு நீங்க வேண்டும் என்பதற்காக ஆற்றிய பணிகள் கொஞ்சமல்ல!

தென்னாப்பிரிக்காவில் நிறவேற்றுமையை எதிர்த்துப் போர் தொடங்கிய அண்ணல் அவர்கள் நம் தாய்த் திருநாட்டில் தீண்டாமையை அடியோடு களைய வேண்டும் என்று விரும்பினார்.

அண்ணலின் கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம், நாம்.

'எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓர் நிறை' என்னும் சமுதாயச் சமன்பாட்டை உருவாக்குவதே அண்ணலுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

## தமிழ்நாட்டில் அண்ணல் காந்தியடிகள்

அண்ணல் காந்தியடிகள் தமிழகத்திற்கு இருபது முறை வந்துள்ளார்கள். விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1) 1896 அக்டோபர் | தென்னாப்பிரிக்காவிலிருந்த போது |
| 2) 1915 ஏப்ரல் | இந்தியாவிற்கு நிலையாகத் திரும்பியபின்னர் |
| 3) 1916 பிப்ரவரி | |
| 4) 1917 செப்டம்பர் | |
| 5) 1919 மார்ச் | |
| 6) 1920 ஆகஸ்ட் | |
| 7) 1921 ஏப்ரல் | |
| 8) 1921 செப். | |
| 9) 1925 மார்ச் | |
| 10) 1927 ஆகஸ்ட் | கதர் யாத்திரை |
| 11) 1927 நவம். | இலங்கையிலிருந்து திரும்பிய வழியில் |
| 12) 1927 டிசம். | சென்னை காங்கிரசுக்கு |
| 13) 1929 மே | திருத்தணி |
| 14) 1933 டிசம்பர் | அரிஜன யாத்திரை |
| 15) 1934 ஜனவரி | |
| 16) 1936 மே | பெங்களூர் சென்ற வழியில் |
| 17) 1936 ஜூன் | பெங்களூரிலிருந்து திரும்பிய வழியில் |
| 18) 1937 ஜனவரி | |
| 19) 1937 மார்ச் | |
| 20) 1946 ஜனவரி | |



# தன்மான இயக்கத் தந்தைக்கு தமிழக அரசு எடுத்த விழா!

சீர்திருத்தச் செம்மல், சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தர், ஈரோட்டுச் சிங்கம், தமிழ்நாட்டு ரூசோ என்றெல்லாம் நாட்டவரால் போற்றிப் புகழப்படும் நந்தமிழ் நாயகனும் தந்தை பெரியார் நூற்றாண்டுத் துவக்க விழா, அவர் பிறந்த திருவிடமான ஈரோட்டில் மிகச் சீரும் சிறப்புமாக நடந்தது.

**ஈடு இணையில்லா விழா !**

செப்டம்பர் திங்கள் 17, 18 இருநாட்கள்-ஈரோடு நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! தெருவெல்லாம் தந்தை பெரியாரின் திருவுருவப் படங்கள், தோரணங்கள், வரவேற்பு வளைவுகள். கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

தமிழக அரசின் சார்பில் நடந்த இந்த ஈடு இணையிலாத திருவிழா முதல் நாள் காலை மங்கல இசையுடன் தொடங்கியது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராமவீரப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், நூற்றாண்டு விழா ஓராண்டு முழுவதும் நடைபெறுகிறது என்றும், தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் விழா நடக்கவிருக்கிறது என்றும் கூறினர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழாவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை வகித்தார்.

**காலம் ஒருநாள் வரும்!**

இந்திய அரசு பாதுகாப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் துவக்க விழாச் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''சிறந்த தலைவரான பெரியார் ஒரு ஸ்தாபனமாக-ஒரு இயக்கமாகத் திகழ்ந்தவர். அநீதி, அக்கிரமங்களை எதிர்த்து நாட்டு மக்களுக்காக அரும்பாடுபட்டவர் அவர். பெரியாருக்குத் தமிழகத்தில் மட்டுமே தொண்டர்கள் இருந்தாலும்கூட, அவர் இந்தியா முழுவதற்கும் சொந்தமானவர்.

''அவரது கொள்கைகளும், தத்துவங்களும் விவாதத்துக்குரியவையாக இருக்கலாம். ஆனல், அவரது கொள்கைகளின் அடிப்படை நிரந்தரமானது. அனைவரும் அவற்றை ஏற்றுக்-கொள்ளும் காலம் வரும்.

மதுரை சோமசுந்தரம் குழுவினரின் இன்னிசை.





ஊர்வலத்தில் வந்த ஊர்திகளில் ஒன்று.....

**இந்தியாவுக்கே வழிகாட்டி !**

''அநீதிகளுக்கும், அக்கிரமங்களுக்கும் ஆளான மக்களுக்கு அவர்களது துயரங்களைத் தீர்க்கப் பாடுபட்டார். நாட்டில் எந்தக் கொடுமைகள் நடந்தாலும் அதை எதிர்த்துத் தமிழ்நாட்டிலிருந்து குரல் கொடுத்துக் கொண்டிருந்தார் பெரியார்.

''பெரியாரின் தத்துவங்கள், போதனைகள் ஆகியவை இந்தியா முழுவதற்கும் வழிகாட்டியாக இருக்கும்.''

**விடுதலை வீரர் !**

தந்தை பெரியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''விடுதலைக்குப் பாடுபடும் வீரராகவே தனது பொது வாழ்வினைத் தொடங்கினர். ஆனால், பிறகு பகுத்தறிவுக் கண்கொண்டு சமூகப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, தன்மான இயக்கத்தைத் தோற்றுவித்தார். வாழ்க்கையின் ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகுவதற்குத்தக்க வகையில் பல்வேறு சமுதாயத் திட்டங்களை அவர் வகுத்தார்.

''அறிவைப் புறக்கணிக்கும் மூடப் பழக்க வழக்கங்களை ஒதுக்கிவிட்டு, பகுத்தறிவின் அடிப்படையில்தான் வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்பதை மக்களிடம் வலியுறுத்திக் கூறிய ஒரே தலைவர்-ஒப்பற்ற தலைவர்-ஈ. வெ. ரா. அவர்கள் தான். யாருக்கும் பணியாத, எதற்கும் வளைந்து கொடுக்காத பகுத்தறிவாளர்; மானுடநெறி காக்கும் பண்பாளர். அன்பும், அறிவும் இணைந்த வாழ்க்கையையே மக்கள் வாழ வேண்டும் என்று விரும்பினர். நீதி, நேர்மை, சமத்துவம், அறம் அனைத்தும் நிலவுகின்ற சுதந்திரச் சூழ்நிலையில் சமுதாயம் வளர்ந்து முன்னேற வேண்டுமென்பதற்காகப் பாடுபட்ட தீவிர சமுதாய சீர்திருத்தவாதி அவர்.

''நம் காலத்தில் காணப்படும் சமுதாயக் கேடுகளை வேரறுக்க அயராது பாடுபட்டவர். மது விலக்கை ஆதரிப்பதில் அவர் எவ்வளவு அழுத்தமாகச் செயற்பட்டார் என்பதை யாரும் மறுக்க முடியாது. பெண்ணடிமை ஒழியப் பாடுபட்டார். பெண்களை அடிமைப்படுத்தும் அனைத்தையும் அகற்ற வேண்டும் என்று எல்லா அரசுகளையும் அவர் வற்புறுத்தினர்.

''வெறும் அறிவையும், அறிவியலையும் மட்டும் நம்பினால், நாம் அரக்கர்களாகி விடுவோம். பகுத்தறிவு என்பது கைப்பிடியே இல்லாத கூர்மையான கத்தி. அதை எந்தப் பக்கத்தில் தொட்டாலும் காயம் ஏற்படும். ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காக மட்டுமே போராடிய ஈ. வெ. ரா. போன்ற பெரியார்களின் வாழ்க்கையிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் பாடம் இதுதான்.

''இந்த உலகில் ஒருவனுக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கையை விட வேறொரு வாழ்க்கை கிடையாது. எனவே, இந்த வாழ்க்கையை இந்த உலகில் முறையாக நடத்த முயல வேண்டும். எப்போதும் தன்னம்பிக்கையுடனும் நேர்மையுடனும் பாடுபட்டு இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதே பெரியார் நமக்குத் தரும் பாடம்.''

**நாடு போற்றும் நற்பணி !**

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''பெரியார் தன்மான உணர்வையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினர். நாடு போற்றக் கூடிய நல்ல பணியைச் செய்தார்.

''பெரியார் அஞ்சல் தலையை வெளியிடுவதால் அவருக்குப் பெயர் புகழ் ஏற்படுமா என்றால், அது இல்லை. ஆனாலும், இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

''பெரியார், அஞ்சல் தலையை வெளியிடுமாறு மத்திய அரசுக்குக்

கோரிக்கை விடுத்தபோது, மத்திய அரசில் இருந்தவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் தாமதப்படுத்தி வந்தார்கள்.

''ஆனால், இப்போதுள்ள மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தபோது, பரிசீலனை செய்கிறோம் என்று கூறி சில வாரங்களில் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். இதற்காக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''மத்திய அரசு அய்யாவின் அஞ்சல் தலையை வெளியிடத் தாமதப்படுத்தியதற்குக் காரணம், அய்யா பெயர் சொன்னால் அச்சப்படுகிறவர்கள் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், இந்தியா முழுவதும் இருக்கிறார்கள்.

''தாழ்ந்த சமுதாயத்தை நிமிர்ந்து நிற்கச் செய்த அய்யாவை நினைத்துப் பார்க்கும்போது அச்சப்பட்டாலும், அஞ்சல் தலையை வெளியிட மத்திய அரசு ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி !**

''அஞ்சல் தலையைப் பார்க்கும்போது என் உள்ளத்தில் தோன்றியது என்னவென்றால், 100 ஆண்டுகள் கழித்து அந்த அஞ்சல் தலையைப் பார்க்கும் சமுதாயத்தினர் என்ன பேசுவார்கள் என்று சிந்தித்தேன்.

''அய்யாவின் அஞ்சல் தலையை வெளியிட்டது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் 50 இலட்சம் அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. இதைக் காண்பவர்கள் உள்ளத்தில் ரவீந்திரநாதத் தாகூர் போன்றுள்ள இவர் யார் என்ற கேள்வி எழாமல் இருக்காது.

''பெரியார் சமுதாயப் பணிக்குப் பாடுபட்டார். தாய்க்குலத்திற்குச் சம உரிமைக்குத் தன் வாழ்நாள் முழுவதும் தியாகம் செய்தார்.

''இந்த விழா கொண்டாடுவது என்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதற்காக அல்ல. பெரியாரின் கொள்கைக்காக இரத்தம் சிந்திய தொண்டர்களுக்கே இந்தப் பெருமையின் பங்கு ஏற்படும். அந்தத் தொண்டர்களுக்கு நன்றி கூறுவது நம் முதல் கடமை. தொண்டர்களுக்கு நன்றி கூறாவிட்டால், அது பெரியாருக்கு நாம் செய்யும் துரோகம்.''

விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள், முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திரு வி. வி. இராமசாமி அவர்கள் ஆகியோர் தந்தை பெரியார் அவர்களின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறினார்கள்.

**அஞ்சல்தலை வெளியீடு :**

பெரியார் நூற்றாண்டுவிழாவையொட்டி, பெரியார் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. அஞ்சல் துறை அலுவலர் திரு ஜானகிராம் அவர்கள் கொடுத்த அஞ்சல் தலையை மேதகு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வெளியிட்டார். இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் இந்த அஞ்சல் தலைகளைப் பெற்றுக் கொண்டனர்.

மாண்புமிகு முதல்வரின் பேருரைக்குப் பின்னர் திரு முத்துசாமி, எம். எல். ஏ., அவர்கள் நன்றி நவில முற்பகல் நிகழ்ச்சி சிறப்புடன் நிறைவேறியது.

**சிறப்பு அணிவகுப்பு ஊர்வலம் :**

விழாவையொட்டி பிற்பகல் பிரம்மாண்டமான ஊர்வலம் நடந்தது. தந்தை பெரியாரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கருத்து விளக்க அலங்கார வண்டி



பெரியார் அஞ்சல் தலையை வெளியிட்டு மேதகு ஆளுநர். மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்களிடம் 'ஆல்பம்' வழங்குகிறார்.



மகளிர் அரங்கில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி. பி. டி. சரசுவதி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன், திருமதி சௌந்தரா கைலாசம், திருமதி அனந்தநாயகி.

களுடன், என். சி. சி., சாரணர், ஊர்க்காவல் படையினர், மகளிர் ஆகியோரின் அணிவகுப்பும் வ. உ. சி. சிதம்பரனார் பூங்காவிலிருந்து நாதசுர இசை முழங்க ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தை முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாலை நடந்த மகளிர் அரங்க நிகழ்ச்சிக்குத் திருமதி சத்திய வாணிமுத்து எம். பி. அவர்கள் தலைமை வகித்தார். திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.

விழாவில் தந்தை பெரியாரின் அருமை பெருமைகளை விளக்கி மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள், திருமதி மனோரஞ்சிதம் சனார்த்தனம் அவர்கள், திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள், திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள், திருமதி பார்வதி அர்ச்சுனன் அவர்கள், செல்வி பாகிரதி அவர்கள், திருமதி அரசு மணிமேகலை அவர்கள், திருமதி மண்டோதரி கணேஷ் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

**கனிமிகு கலைநிகழ்ச்சி :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தலைமையில், சைதை நரிக்குறவர் மாணவரில்ல நடனம், கலைமாமணி குலதெய்வம் ராஜகோபால் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி, 'இசைப்பேரரசு கலைமாமணி' மதுரை சோமு அவர்களின் இன்னிசை ஆகியவை சிறப்பாக நடந்தன.

**கருத்துமழை பொழிந்தது !**

18-9-78 அன்று நடந்த இரண்டாம் நாள் விழா, 'மந்திரமா? தந்திரமா?' என்னும் உண்மை விளக்கத் தந்திரக் காட்சிகளுடன் தொடங்கியது. திரு ஆர். ஏ. வி. பத்ரன் அவர்கள் இதனை அமைத்திருந்தார்.

பிறகு நடந்த கருத்தரங்கிற்கு வந்திருந்தவர்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் வரவேற்றார். திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் பல்வேறு தலைப்புகளில், பெரியாரின் சிறப்பியல்புகளை விளக்கி தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. க. இராசாராம் (பெரியாரும் மொழிக்கொள்கையும்), திரு ஏ. பி. சனார்த்தனம் எம். பி. (பெரியாரும் சாதி ஒழிப்பும்), திரு டி. கே. சீனிவாசன் (பெரியாரும் அறிஞர் அண்ணாவும்), டாக்டர் வா. செ. குழந்தைசாமி (பெரியாரும் அறிவியல் கண்ணோட்டமும்), திரு. டி. வி. நாராயணசாமி (பெரியாரும் போராட்டங்களும்), திரு திருக்குறளார் வீ. முனிசாமி (பெரியாரும் காந்தியடிகளும்), டாக்டர் அவ்வை நடராசன் (பெரியாரும் தன்மான உணர்வும்), திரு கொண்டல் எஸ். மகாதேவன் (பெரியாரும் எழுத்துச் சீர்திருத்தமும்), திரு சிலம்பொலி செல்லப்பன் (பெரியாரும் சமூகச் சீர்திருத்தமும்) ஆகியோர் கருத்து மழை பொழிந்தனர்.

**தேன்மழை பொழிந்தது !**

பிறகு, கவியரங்கம் நடந்தது. வந்திருந்தோரை வரவேற்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் பேசினார். கவியரங்கிற்குக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமை வகித்தார்.

கவியரங்கில் பல்வேறு தலைப்புகளில் கவிஞர் பெருமக்கள் தம் கவிதைகளைப் பாடினார்கள்.

மாண்புமிகு கிராமக் கைத்தொழில்கள் அமைச்சர் திரு க. இராசாமுகமது (சீர்திருத்தச் செம்மல் பெரியார்), கவிஞர் புலமைப்பித்தன் எம். எல். சி., (சிந்தனைச் சிற்பி பெரியார்), கவிஞர் கா. வேழவேந்தன் (புரட்சி எழுத்தாளர் பெரியார்), கவிஞர் தஞ்சை வாணன் (சமூகச் சீர்திருத்தவாதி பெரியார்), கவிஞர் வைரமுத்து (மொழிப் போர் வீரர் பெரியார்), கவிஞர் கோவை இளஞ்சேரன் (அறப்போர் வீரர் பெரியார்), பெரும்புலவர் வீ. அரங்கனார் (தன்மான வீரர் பெரியார்), கவிஞர் பொன்னடியான் (வைக்கம் வீரர் பெரியார்), கவிஞர் ஆர். நாராயணசாமி (பகுத்தறிவுத் தந்தை பெரியார்), கவிஞர் பொன்மணி வைரமுத்து (பெண்ணுரிமைப்

பேணுநர் பெரியார்), கவிஞர் தன கனிமொழியன் (புரட்சிப் பேச்சாளர் பெரியார்) ஆகியோர் தேன்மழை பொழிந்தனர்.

**சீர்மிகு சிறப்புச் சொற்பொழிவுகள்:**

பிறகு, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளையெல்லாம் விளக்



கிடும் வண்ணம் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், மதுரை மாநகராட்சி மேயர் வணக்கத்துக்குரிய எஸ். முத்து அவர்கள், திரு ப. உ. சண்முகம் அவர்கள், திரு குமரி அனந்தன் எம்.பி., அவர்கள், திரு சி. சுப்பிரமணியம் எம்.பி. அவர்கள், திரு. கல்யாண சுந்தரம் எம்.பி. அவர்கள், திரு கருப்பையா மூப்பனார் எம்.பி., அவர்கள், திரு கே. எஸ். அப்துல் வகாப் எம். எல். சி. அவர்கள், சிதம்பரம் கிருஷ்ணசாமி அவர்கள், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், திரு எஸ். எம். துரைராஜ் அவர்கள் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவில் பங்கு பெற்றனர்.

**பெருமைப்படக்கூடிய நிகழ்ச்சி**

மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், விழா நிறைவுச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த நிகழ்ச்சி ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல; மக்களின் வரிப்பணத்தில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. நாட்டின் பகுத்தறிவுவாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நடத்தும் ஒரு விழாவாகும் இது. தாய், பிள்ளை, முதலாளி, தொழிலாளி அனைவரும் தலை நிமிர்ந்து பெருமைப்படக்கூடிய நிகழ்ச்சியாக இது உள்ளது.

**தமிழைக் காப்போம் !**

''அண்ணா சொன்னதில் எதை நான் செய்யவில்லை? தமிழ் மொழியை அழிக்க எந்த மொழி வந்தாலும் அதை எதிர்ப்போம். ஆனால், இந்தி மட்டுமே ஆட்சி மொழி, தேசிய மொழி என்றால் அதைக் கடுமையாக எதிர்ப்போம். ஆனால், அதை விடுத்து இந்தியே கூடாது என்று சொல்லப் போகிறோமோ? இந்தி மொழிக்குப் பதிலாகப் புதிதாக உருதுமொழியோ வங்காள மொழியோ வந்தால் நாம் ஏற்க முடியுமா?''

அன்று இரவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் தலைமையில், கே. பி. ராஜ்மோகன் குழுவினரின் ''பெரியார் ஒரு சகாப்தம்'' என்னும் நாடகம் நடந்தது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. எச். மொய்னுதீன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் நன்றி நவில வரலாற்றுச் சிறப்பு மிக்க தந்தை பெரியார் நூற்றாண்டுத் தொடக்க விழா நிறைவெய்தியது.

தமிழரசு அடுத்த இதழில்

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகள்— சுருக்கம் இடம் பெறும்.



டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்



டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை. நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்

# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

# முதல் சந்திப்பு

தமக்கும் காந்திஜிக்கும் இருந்த தொடர்பைக் குறித்துப் பெரியார் இந்த நூல் ஆசிரியரிடம் கூறிய சில கருத்துக்களாவன:—

"காந்தியார் மீது நான் காங்கிரசில் இருந்தபோது எனக்கு விசுவாசம் இருந்தது. 1921 ஆக இருக்குமென்று நினைக்கிறேன். ஈரோட்டிற்கு காந்தியார் வந்திருந்தார். எங்கள் வீட்டிற்கும் வந்தார். அப்போதுதான் நான் அவரை முதன் முதலில் சந்தித்ததாகும்.

"காந்தியார் எனக்கு இரண்டு முறை கடிதங்கள் எழுதியிருக்கிருர். ஒருமுறை என்னுடைய தொண்டைப் பாராட்டிக் கடிதம் எழுதிஞர். மற்றொருமுறை அவர் எனக்குக் கடிதம் எழுதியது என்னுடைய கையில் வலி ஏற்பட்டு நான் துன்பப்பட்ட சமயமாகும். 'நீங்கள் இராட்டையை அதிக நேரம் சுழற்றியதால் இந்த வலி ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆகையால் வலி குறையும்



வரை சிறிது காலத்திற்கு இராட்டையைச் சுழற்றுவதை நிறுத்தி வையுங்கள்'' என்று அவர் எழுதியிருந்தார். சட்ட மறுப்புப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு காலம். ஆயிரக் கணக்கில் ஆண்களும் பெண்களும் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைக்குச் சென்று விட்டார்கள். அந்தச் சமயம் இந்திய அரசுடன் சமாதானப் பேச்சு நடத்தி அரசியலில் அமைதியான நிலையை ஏற்படுத்தக் கருதி சர். சங்கரன் நாயர் ஒரு சமாதான மாநாடு கூட்டினர். சமாதானப் பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு போராட்டத்தைக் காங்கிரஸ் கைவிட வேண்டுமென்று அவர் ஒரு நிபந்தனை கூறினர். அதை காந்தியார் ஏற்கவில்லை. "இந்தப் போராட்டத்தை நிறுத்துவது என் கையில் இல்லை; ஈரோட்டில் ஈ. வெ. இராமசாமியின் தங்கை, மனைவி, ஆகியோர் கையில் இருக்கிறது" என்று அந்த மாநாட்டிலேயே கூறினர்.

இவ்வாறு காந்தியார் கூறியதற்குக் காரணமும் இருந்தது. அம்முறை சட்டமறுப்பில் பங்கு கொண்டு என் மனைவி சிறைக்குச் சென்றபின், ஏராளமான பேர் அந்த அம்மாளைப் பின்பற்றிச் சிறைக்குச் சென்றுர்கள். எங்கள் குடும்பத்திற்கு ஈரோட்டில் நல்ல செல்வாக்கு உண்டு. மேலும், நான் நகராட்சித் தலைவராகவேறு இருந்திருக்கிறேன். ஆகையால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக அதிகமான பேர்–நண்பர்களும் ஆதரவாளர்களும்—சிறைக்குச் சென்று விட்டார்கள். ஆகையால் அங்கு இருந்த அதிகாரிகள் 144 தடை உத்திரவு போடுவதற்கு யோசிக்க வேண்டியதாகப் போய்விட்டது. 'சட்ட மறுப்புப் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தயரிப்பட்ட முறையில் வழக்குத் தொடரட்டும்; அதன் பின் நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். நாமாகத் தடையுத்தரவு போட வேண்டாம். தடையுத்தரவு போட்டால் போராட்டம் சமாளிக்க முடியாத அளவு மேலும் கடுமையாகலாம்' என்று கருதி விட்டுவிட்டார்கள். இது இந்தியா முழுவதற்கும் ஒரு முன் மாதிரியான வெற்றியாக, 144-ஐயே தோற்கடித்த வெற்றியாகக் கருதப்பெற்றது. நான் காங்கிரசின் மீது பற்றுக் கொண்டிருந்த காலத்தில் இந்தியைப் பரப்புவதிலும் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தேன். ஈரோட்டில் இந்தி கற்றுக் கொடுக்கப் பள்ளி ஒன்றையும் தொடங்கி நடத்தினேன். அந்தப் பள்ளியைத் தொடங்கி வைத்தவர் பண்டித மோதிலால் நேரு ஆவார். அந்தக் காலத்தில் மது விலக்கிலும் எனக்கு ஈடுபாடு இருந்தது. மதுவிலக்கை வெற்றியாக்கும் எண்ணத்துடன்



என்னுடைய தென்னந்தோப்பில் இருந்த தென்னைகளை வெட்டினேன். என்னைப் பின்பற்றி என்னுடைய நண்பர்களும் தங்கள் தங்கள் தென்னந்தோப்புகளிலிருந்த தென்னைகளை வெட்டினர்கள்."

—திரு அ. இராமசாமி, பி.ஏ.,
('தமிழ்நாட்டில் காந்தி' எனும் நூலிலிருந்து...)



# பெரியார் குறித்து பேரறிவாளர்கள்

இந்தியாவில் இன்று பொது வாழ்வில் உள்ள மிக முக்கியமான பிரபலஸ்தர்களில் பெரியார் அவர்களும் ஒருவர் என்பதைத் தயங்காமற் கூறுவேன்.

செய்கையில் உண்மை, நீதியை நிலை நாட்டுவதில் அடங்கா ஆர்வம், சிறிதும் தன்னலமென்பதே இல்லாத வாழ்க்கை— இவைகளே ஒரு மனிதனைச் சிறந்தவனுக ஆக்கக்கூடியனவென்ருல், உண்மையிலேயே பெரியார் நம்முடைய மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவராவார். நாட்டிற்குத் தொண்டு புரிவதற்காகவே தம்முடைய வாழ்க்கையைப் பயன்படுத்துவதிலுள்ள அவரது ஆர்வமும், இந்திய சமுதாயத்திலுள்ள கேடுகளை ஒழிப்பதற்காக அவைகளுக்கெதிராய்ச் செய்து வரும் பிரச்சார முறைகளும், அவைகள் மீது அவருக்குள்ள நியாயமான கோபாவேசமும், இக்காரணங்களுக்காக அவர் செய்துள்ள மகத்தான தியாகங்களும் தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தில் பெரியாருக்கு ஒரு நிரந்தரமான இடங் கிடைக்குமாறு செய்துவிட்டன.

—சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்



இராமசாமிப் பெரியார், அவர் ஈரோட்டில் பிறந்து வளர்ந்தவர். அவர் தம் புகழோ தென்னுடெங்கிலும், வடநாட்டிலும், பிற நாடுகளிலும் மண்டிக் கிடக்கின்றன! காரணம் என்ன? தோழர் ஈ. வெ. ராவின் உண்மையும், வாய்மையும், மெய்ம்மையும் செறிந்த அறத் தொண்டாகும்.

தோழர் இராமசாமியார் பல நூல் பயின்றவரல்லர் ; அவர் செல்வராயினும் எளிமையில் நின்று பழகியவர் ; இக்காலச் சூழ்ச்சியே அவருக்குத் தெரியாது. அவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்.

உரிமை வேட்கை, அஞ்சாமை முதலியன ஈ. வெ. ராவின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடை மலை.

—திரு. வி. க.

சீரார் ஈ. வெ. ரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அக நகும் நட்பு யார் என்ன சொன்ன போதிலும் என்றும் குறையாது.

—இராஜாஜி.

பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் சாதி, மூடநம்பிக்கைகளை முழு மூச்சுடன் எதிர்த்த பெருந் தலைவர்....

—ஜெயப்பிரகாஷ் நாராயணன்.

வைக்கம் வீரர் ஒரு மனிதர் அல்லர்; அவர் எனக்கு ஒரு மனிதராகத் தோன்றவில்லை. ஒரு கொள்கையாகவே தோன்றுகிருர்

உலகத்தில் எந்தெந்தத் தேசங்கள் முன்னேறியிருக்கின்றனவோ, அந்தந்தத்

தேசங்களில் இவரது கொள்கை நிலவக் காணலாம். மற்றும், தீவிரமாக எந்த மக்கள் சுதந்திரப் போராட்டம் செய்கின்றனரோ, அந்த மக்கள் இந்தக் கொள்கையையே கொண்டிருப்பதையும் காணலாம்.

—எஸ். இராமநாதன்

மற்றவர்களுடைய உணர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கொஞ்சமும் மதியாது, தமக்குச் சரியென்று பட்டதை வலியுறுத்தி வந்த காரணத்தாலேயே நான் அவரிடம் மாறாத அன்பு கொண்டேன். அத்தகைய ஒரு சிறந்த குணமே இப்போது நம் மக்களின் முற்போக்குக்கு அவசியமாயிருக்கிறது.

—டாக்டர் பி. சுப்பராயன்



மேனாட்டில் அன்று பிறந்து வளர்ந்த சாக்ரடீஸ் என்ற ஓர் அறிஞரைப் பற்றிக் கேட்டோம். ஆனால், கண்டோமில்லை. இவ்விந்தியாவிலேயே, அங்ஙனம் கண்டதாகக் கூறுவாருமில்லை.

எனினும், இத்தமிழ் நாட்டில், இன்று அரும்பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீஸைக் கண்டோம்; தாடியோடு கண்டோம். அவர்தான் நம் ஈ. வெ. இராமசாமிப் பெரியார்.

—பட்டுக்கோட்டை அழகிரிசாமி.



திரு ஈ. வெ இராமசாமிப் பெரியார் சட்டசபைகளைப் பற்றியோ, அரசாங்கத்தைப்பற்றியோ கவலைகொள்ளாதவர் அவர் ஏழைகளுக்குத் தொண்டு செய்வதே "தமது பிறவியின் பயன் என்று கருதியிருப்பவர்.

—எம். ஆர். ஜெயகர்



தற்காலத் தமிழகத்தில் தலைநின்று, ஒல்லும் வகை ஓயாது உழைத்து, தமிழர் வாழ் உயர்வளம் சிறக்க உரிமைப் போர்த் தலையணியில் பொருதுவரும் ஒப்புயர்வற்ற தலைவர், இராமசாமிப் பெரியார். காந்தியடிகளாலும் பாராட்டப்பெற்றுப் பொது நலம் பேணும் அறம் திறம்பா அருண்மறவரிவர். கலாநிலையக் கல்விப் பட்டங்கள் பெருமலும், மானமிழந்து பிறர் பின் நின்று பதவி முதலிய வீண் பெருமை தேட விரும்பாமலும், ஊக்கமும் வாய்மையும் ஆக்கமனைத்தும் தரும் என்பதை நாள்தோறும் தாம் வாழ்ந்து காட்டும் சால்புடையார். கல்வி வளம் செல்வம் போல் மிகுந்து மலிந்த ஆங்கில நாட்டில், கல்லூரிப் பயிற்சி மிக இல்லாமல், தன்னலமறந்து, பிறர் உரிமை பேண முயன்று, பெருமையும் புகழும் பெற்றுயர்ந்து ''பிராட்லா'' வைப் போலவே, நமது பெரியாரும் தம் வாழ்வனைத்தும் தமிழர் உரிமை பேணும் அறப் போருக்குதவி, நல்லோர் மதிப்பும் அல்லோர் அழுக்காறும் நாளும் பெருக்கும் இயல்புடையார்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

திரு இராமசாமி நாயக்கரைப் பற்றி, நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது?

திரு நாயக்கரிடத்திலுள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனத்திற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஓர் உத்தம குணந்தான்.

—வ, உ. சிதம்பரனார்.



# மருந்துச் செடிகளின்

நம் நாடானது தொன்றுதொட்டே மருந்துச் செடிகளின் இருப்பிடமாக இருந்து வருகிறது. ஆனால், விஞ்ஞான முறையில் அனுபவமில்லாததனல் இத்தகைய மருந்துச் செடிகளைப் பற்றி அநேகமாகத் தெரிந்திருக்க வழியில்லை. தொன்றுதொட்டு நம் பெரியோர்கள் இத்தகைய செடிகளை வில்லைகளாக மாற்ருமல் அப்படியே உபயோகித்து வந்தார்கள். ஆனல், தற்போது மேல் நாட்டினர் நம் நாட்டுச் செடிகளை வாங்கி அதிலிருந்து வில்லைகளைத் தயாரித்து அவற்றை நம் நாட்டிற்கே அதிக இலாபத்துடன் விற்றுக்கொண்டிருக்கின்றனர். நாமே அவ்வாறு வில்லைகளாகத் தயாரிப்போமானல் நோயின்றி வாழ, நலம் பெற, நாடு செழிக்க ஏதுவாகும்.

அதுவுமின்றி வெவ்வேறு மருந்துச் செடிகளை விஞ்ஞான முறையில் பயிரிட்டு ஏற்றுமதி செய்து அயல்நாட்டுச் செலாவணியை (Foreign exchange) அதிகரிக்கலாம். குணமாகாத நோய்களாகிய சர்க்கரை நோய் ( Diabetes ), புற்று நோய் ( Cancer ) ஆகிய நோய்களைக் குணப்படுத்துவதில் இவைகளுக்கு முதலிடம் உண்டு. உலக மக்களின் நலத்திற்காகவே இத்தகைய மருந்துச்செடி பயிரிடுவதை ஏற்றுக் கொள்ளலாம். மனிதனின் நோய்களை நீக்கி, நல்வாழ்வு பெற இத்தகைய மருந்துச் செடிகளைச் செவ்வனே பயிரிடுவோமாக!

நமது நாடு 1963-64 ஆம் ஆண்டில் ரூ. 3.63 கோடி மதிப்புள்ள மருந்துச் செடிகளை ஏற்றுமதி செய்தது. ஒவ்வொரு ஆண்டில் இத்தகைய ஏற்றுமதி அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. 1974-75 ஆம் ஆண்டில் ரூ. 17.5 கோடி மதிப்புள்ள மருந்துச் செடிகளை ஏற்றுமதி செய்தது. நாம் இன்னும் இரசாயன முறைகளைக் கையாளுவோமெனில் இத்தொழிலில் அதிக அளவில் அந்நிய நாட்டுச் செலாவணி ஈட்டலாம் என்பதில் ஐயமில்லை.

நம் நாட்டில் 2,000 வகை மருந்துச் செடிகள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. கரட்டுச்சுண்டைக்காய் Solanum Viarum
2. டையஸ்கோரியா Dioscorea floribunda
3. டிஜிடாலிஸ் Digitalis lanata
4. எட்டிக்காய் Strychnos naxvomica
5. நித்திய கல்யாணி Catharanthus rosea
6. சர்பகந்தி Rauwolfia serpentiana
7. பாப்பி (அபினி செடி) Papaver Somniferum
8. சென்ன Cassia angustifolia
9. மருந்துப் புதின Mentha piperita
10. பிளேன்டேகோ Plantago ovata
11. வெட்டிவேர் Vetiveria zizanoides
12. பைரத்திரம் Chrysanthemum cinerariifolium
13. கேந்தி Tagetes erecta
14. பக்வீட் (பபரே) Fagopyrum tartaricum
15. பப்பாளி Carica papaya
16. பெல்லடோன Atropa belladonna



ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆண்ட போது, இந்நாட்டுச் செடிகளின் செல்வத்தைக் குறிப்பிடும் வகையில் இந்தியாவை 'உலகச் செடிகளின் களஞ்சியம்' (Botanical Garden of the World) என்று அழைத்தனர். நாம் இந்நிலையை நன்குணர்ந்து தற்போது முக்கியமாய்ப் பயிரிடும் மருந்துச் செடியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தற்போது தமிழ்நாட்டிலே நித்திய கல்யாணி 1000 எக்டேரிலும், செசியா ( Cassia angustifolia ) 300 எக்டேரிலும் பயிரிடப்பட்டு வருகின்றன. முக்கியமாக நித்திய கல்யாணி அல்லது சுடுகாட்டு மல்லி என்னும் செடியைப் பற்றி ஈண்டுக் காண்போம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங்களில் தற்போது இச்செடி அதிகமாகப் பயிரிடப்படுகிறது.

நித்திய கல்யாணி மடகாஸ்கர் நாட்டைச் சேர்ந்தது. தற்போது பிலிப்பைன்ஸ், மொஸாம்பிக், ஆஸ்திரேலியா, வியட்நாம், இலங்கை, இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இதைப் பயிரிட்டு வருகின்றனர். இதன் பூக்கள் அழகாகவும், வண்ண வண்ண நிறங்களாகவும் இருப்பதனல் இதை ஒரு பூந்தோட்டப் பயிராகவும் பயிர் செய்து வருகிருர்கள். ஆகவே, இதை வீட்டுத் தோட்டங்களிலும் பார்க்கலாம்.

இந்தச் செடியானது, மிகக் குறைந்த கவனிப்புடன் எங்குப் பயிரிட்டாலும் வரக் கூடியது. ஆகவே, இதை வெகு சுலபமாக நாம் பயிரிட்டு இலாபம் பெறலாம்.

**நாற்றங்கால் :**

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழவேண்டும். பெரிய மண் கட்டிகளை உடைத்து 3 X 1 மீட்டர் அளவுக்கு நிலத்தை விடச் சற்று உயர்ந்த பாத்திகள் அமைக்க வேண்டும். இந்தப் பாத்திகளில் மக்கிய தொழு உரத்தை ஒரு பாத்திக்கு 25 கிலோ வீதம் மேலாகப் பரப்ப வேண்டும். ஒரு வாரத்திற்குப் பிறகு இதை மண் வெட்டியால் கொத்தி, மறுபடியும் சமப்படுத்த வேண்டும். ஒரு பாத்திக்கு 50 கிராம் விதை போதுமானது. ஒரு எக்டருக்கு 300 கிராம் விதை தேவைப்படும். இந்த விதையை வரிசைகளில் மேலாகத் தூவி அதற்கு மேல் விதைகளை மறைக்க நல்ல வண்டல் மண்ணைத் தூவ வேண்டும். பிறகு தினமும் தண்ணீர் ஊற்ற வேண்டும். ஏழு நாட்களுக்குள் விதை முளைத்துவிடும். சுமார் 45 முதல் 60 நாட்களுக்குப் பின்னர் நாற்றுக்களைத் தோட்டத்தில் நடலாம்.

**தோட்டத்தின் தயாரிப்பு முறை :**

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்ருக உழவேண்டும். பிறகு பெரிய மண் கட்டிகளை உடைத்து, ஒரு எக்டருக்கு 25 டன் வீதம் மக்கிய தொழு உரமிட்டு மீண்டும்

# ராணி



ஒரு முறை நன்றாக உழவேண்டும். நிலத்தை நன்றாகச் சமப்படுத்திய பிறகு 45. செ.மீ. இடைவெளிவிட்டு பார் ( Ridges and furrows ) பிடிக்கவும். நீர்' பாய்ச்சிய பிறகு 20 செ. மீ. இடைவெளியில் பார்களின் ஒரு சரிவில் நாற்றுக்களை நடவேண்டும்.

**நீர்பாய்ச்சுதல் :**

செடி நட்டவுடன் ஒரு முறையும், பின், மூன்றாம் நாள் ஓர் உயிர் தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். இதேபோல் மூன்று நாட்களுக்கு ஒரு முறை 4 தடவைகள் நீர் பாய்ச்சுதல் நல்லது. பிறகு பத்து நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது.

**களை எடுத்தல் :**

எப்பொழுது களை தெரிகிறதோ, அப்போது நன்றாகக் கொத்திவிட்டுக் களைகளை எடுக்க வேண்டும். இந்த மாதிரி இரண்டு தடவைகள் எடுத்தால் போதும். செடிகள் நிலத்தை நிறைத்த பின் களைகள் வருவது நின்று விடும்.

**உரமிடல் :**

நட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு 25 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும் செடியின் பக்கத்திலிட்டுக் கொத்திவிட வேண்டும். நட்ட இரண்டு மாதத்திற்குப் பிறகு 25 கிலோ தழைச் சத்தையிட்டுக் கொத்தி விட வேண்டும்.

**நோய்களும் தடுப்பு முறைகளும் :**

இச் செடி பொதுவாகப் பூச்சி பூஞ்சாளங்களால் தாக்கப்படுவதில்லை. எனவே, மருந்து தெளிக்க அவசிய மேற்படாது. ஆனால், ஒரு வகை வைரஸ் நோய் தோன்றும். அப்பொழுது இலைகள் சிறுத்துச் செடிகள் குட்டையாகி விடும். அத்தகைய செடிகளைப் பிடுங்கி எரித்துவிட வேண்டும்.

**அறுவடை :**

நட்ட ஆறு மாதத்திற்குப் பிறகு செடிகள் அறுவடைக்குத் தயாராகிவிடும். ஆண்டுக் கணக்கில் அப்படியே விட்டு விடுவதுமுண்டு. அவ்விதச் செடியிலுள்ள மருந்து ( Alkaloid ) அதிகரித்துக் கொண்டே போகும். என்றாலும் நட்ட ஆறு மாதத்திலிருந்து ஓர் ஆண்டிற்குள் நன்றாக அறுவடை செய்வதே சிறந்தது.

இந்தச் செடியை ''மருந்துச் செடிகளின் ராணி'' என்று கூறலாம். இதில் வேர்களில் சில மருந்துகள் இருக்கின்றன. தண்டில் சில உள்ளன. மற்றும் இலைகளில் சில இருக்கின்றன. ஆகவே, எந்தப் பக்குவத்தில் மருந்து தயாரிப்போர் வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அந்தப் பக்குவத்தில் அறுவடை செய்து அனுப்பலாம்.



நன்கு வளர்ச்சியுற்ற நித்திய கல்யாணிப் பயிர்

சாதாரணமாக அறுவடைக்கு முன் மூன்று நாட்கள் தொடர்ந்து தினமும் நீர் பாய்ச்சுதல் வேண்டும். பின்னர் செடியை வேருடன் பிடுங்கவேண்டும். வேரில், ஒட்டியுள்ள மண்ணை நீரால் கழுவி, வேரையும் செடியையும் பிரித்து வெட்டிக் காயப் போட வேண்டும். நன்றாகக் காய்ந்தவுடன் மருந்து தயாரிப்போருக்கு அனுப்பி வைக்கலாம். வேர்களில்தான் அதிகமாக மருந்துச் சத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, வேர்ப் பகுதிக்கு அதிகமான விலை கிடைக்கும். வேர்ப் பகுதிக்கு ஒரு கிலோவுக்கு ரூ. 3.00விருந்து ரூ. 15.00 வரைக்கும் விலை கிடைக்கும். செடிப் பகுதி ரூபாய் ஒன்றிலிருந்து ரூபாய் எட்டு முடிய விலை பெறும்.



சோதனைக்கூட ஆராயச்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகங்கள்





அதிக மகசூல் அளிக்கவல்ல ஒரு ரகம்

**ஆராய்ச்சி முடிவுகள் :**

செடியின் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சியின் முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன:

ஆறுமாத வயதுடைய 20 செடிகளின் சராசரி அளவுகள்:

| செடிபற்றிய விவரம் | அளவு/எடை/ எண்ணிக்கை |
|---|---|
| செடியின் உயரம் | 45.15 (செ.மீ.) |
| செடியின் கிளைகள் | 12.50 (எண்ணிக்கை) |
| செடியின் இலைகள் | 37.30 (எண்ணிக்கை) |
| செடியின் எடை | 65.50 (கிராம்) |
| செடியின் வேரின் எடை | 9.80 (கிராம்) |
| செடியின் வேர் பாகத்திற்கு மேலுள்ள எடை | 55.70 (கிராம்) |
| செடியின் வேரின் அதிகமான நீளம் | 85.25 (செ.மீ.) |
| செடியின் சராசரி வேரின் நீளம் | 21.02 (செ.மீ.) |

தற்போது எல்லாரும் இச்செடியை ஒரே இனமாகப் பயிரிட்டு வருகிறார்கள். ஆனால் இதில் முக்கியமாக மூன்று வகைகள் இருக்கின்றன. அவை சிவப்புப் பூ தரக்கூடிய ரகம், வெள்ளைப் பூ தரக்கூடிய ரகம் மற்றும் வெள்ளைப் பூவில் சிவப்புப் பொட்டு வைத்தது (Ocillatus) போன்ற பூ தரக்கூடிய ரகம் ஆகும். சாதாரணமாகச் சிவப்புப் பூவைத் தரும் செடியைத்தான் பெரும்பாலும் பயிரிட்டு வருகிறார்கள். இவ்வொரு ரகம் வெவ்வேறு இனங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் அடுத்த தலைமுறைப் பயிரில் அவை வெவ்வேறு ரகங்களாகப் பிரிந்து செல்ல ஏதுவாகிறது. இப்பிரிவைத் தடுத்து ஒரே ரகமாகப் பிரித்தெடுப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் வெகு விரைவில் ஒரு நல்ல ரகத்தை எதிர்பார்க்கலாம்.



இந்தச் செடியானது விதைகளின் மூலம் தான் பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது ஆராய்ச்சியின் மூலம் இதை மற்ற முறைகளிலும் இன விருத்தி செய்யலாம் என்பதைக் கீழே கொடுத்துள்ள அட்டவணை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

| | | சதவீதம் |
|---|---|---|
| விதை முளைப்பு | ... | 50 |
| வெட்டுத் துண்டுகள் வேர் விடுதல் (cutting) | ... | 52 |
| வேர், இலை பாகங்களைத் தவிர மற்ற எல்லா பாகங்களையும் துண்டாக்கிநடலாம் | ... | ... |
| காற்றுப் பதியன் (Air playering) | ... | 90 |
| பெரிய செடியை நட்ட இடத்திற்கு மாற்றி நடுதல் | ... | 100 |

மேலே கொடுத்துள்ள அட்டவணையிலிருந்து இச்செடியைப் பல முறைகளில் இனப்பெருக்கம் செய்யலாம் என்று காண்கிறோம், விதையே கதி என்றில்லை. மற்ற முறைகளைக் கையாண்டு இந்தச் செடியை வளர்க்கலாம். குறிப்பாக உயர் ரகங்கள் உருவாக்கப்படும் நேரத்தில் அவற்றை இன விருத்தி செய்ய விதையில்லா இனப் பெருக்கத்தை நாம் கையாளலாம்.

செடியின் மருந்துகள் (Alkaloid) ரகத்திற்கு ரகம் மாறுபட்டு இருக்கின்றன. அதுவுமில்லாமல் இடத்திற்குத் தக்கதாயும், வயதிற்குத் தக்கதாயும் இந்தச் செடியின் மருந்துத் தன்மை மாறும். வெள்ளைப் பூ, சிவப்புப் பூ ஆகிய இவ்விரு இனங்களிலும் வேர், தண்டு, இலை ஆகியவற்றின் மருந்தின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| செடியின் பாகம் | மருந்தின் கொள்ளளவு— சதவீதத்தில் | |
|---|---|---|
| | சிவப்பு மலர்ச் செடியில் | வெள்ளை மலர்ச் செடியில் |
| இலை | 1.24 | 0.63 |
| தண்டு | 0.73 | 2.24 |
| வேர் | 2.00 | 1.63 |

ஆகவே சில வகைகளில் வேரிலும், சில வகைகளில் தண்டிலும், இன்னும் சிலவற்றில் இலையிலும் மருந்தின் அளவுகள் அதிகமாக உள்ளன. இது பற்றிய பூரண ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டே இருக்கின்றது.

தற்போது நித்திய கல்யாணியிலிருந்து எழுபத்தைந்து வகை மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. முக்கியமான சில கீழே தரப்பட்டுள்ளன.

1. அஜ்மாலிசின் Ajmalicine
2. அல்ஸ்டோனின் Alstonine
3. காஇவின்சின் Canvincine
4. சதரான்தின் Catharanthine



நாற்று ஒன்றின் வேர்ப் பகுதி



வெட்டுத் தண்டில் உருவாகிய வேர்ப் பகுதி

இடது : ஒரு நாற்றுச் செடி



வலது : தண்டுத் துண்டிலிருந்து சோதனைக் கென உருவாக்கப் பட்ட ஒரு செடி

5. கவின்சின் Cavincine
6. காதரின் Catharine
7. ஐசோலுரோசின் Isoleurosine
8. லுரோசின் Leurosine
9. லுரோசிவின் Leurosevine
10. லிக்நெரிநின் Lichndrinine
11. லாக்நெரின் Lochnerine
12. லாக்நெரிசின் Lochnericine
13. லாக்நெரிடின் Lochneridine
14. லாக்நெரிவின் Lochnerivine
15. மிட்ராபிலின் Mitraphyline
16. பெரிவிடின் Perividine
17. பெரிவின்சின் Perivincine
18. பெரோசின் Perosine
19. புசிலின் Pusiline
20. புசிலிநின் Pusilinine
21. ரிசர்பின் Reserpine
22. சர்பென்டைன் Serpentine
23. சிட்சிரிகின் Sitsirikine
24. டெட்ராஅய்ட்ரோ ஆல்ஸ்டோனின் Tetra hydro alstonine
25. வின்பிளாஸ்டின் Vinblastine
26. வின்கேயின் Vincain



27. வின்கேமிசின் Vincamicine
28. வின்காமின் Vincamine
29. வின்சீன் Vinceine
30. வின்கிரைஸ்டின்Vincristine
31. வின்டாலின் Vindaline
32. வின்டோலிசின் Vindolicine
33. வின்டோனின் Vindolinine
34. விநோடிசின் Vinosidine
35. வின்லுரோசின் Vinleurosine
36. வின்ரோசெடின் Vinrosadine

மேலே கூறப்பட்டவற்றை நோக்குங்கால் இச்செடி உயர்ந்த மருந்துகளைத் தன்னகத்தே பெற்றுள்ளது என்பது புலனாகிறது. எனவே, இதைச் சீரிய முறையில் நாம் பயிரிடுவதுடன் மேற்கொண்டு ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்து இதன் முழுப்பயனையும் பெறப் பாடுபடுவோமாக!

க. நஞ்சன்,

டாக்டர் கி. ம. ப. நம்பீசன், தா. பாலஸ்,
தே. வீரராகவ தாத்தம், ப. ம. கிருட்டிணன்
வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம்,
மதுரை.



## நம்பிக்கை

நம்பிக்கை என்பது சிறு காற்றின் வேகத்தையும் தாங்காமல் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல; அது அடிபெயரா இமயத்தைப் போன்றது!

## ஜனநாயகவாதி

ஜனநாயகவாதி சிறிதளவும் சுயநலமில்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும் கனவும் ஜனநாயகத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

—அண்ணல் காந்தியடிகள்



# அதிர்ஷ்டம் உங்களுக்காக காத்திருக்கிறது!

வாங்கிடுவீர்

## தமிழ்நாடு பரிசுச் சீட்டு

ஒவ்வொரு வரிசையிலும் 2 முதல் பரிசுகள்

# ரூ. 50,000 வீதம்

குலுக்கல் நாள் **20-10-78**

ஒவ்வொரு வரிசையிலும் 3 இரண்டாவது பரிசுகள் ரூ. **10,000** வீதம்

ஒவ்வொரு வரிசையிலும் 5 மூன்றுவது பரிசுகள் ரூ. **5,000** வீதம்

மொத்தப் பரிசுத் தொகை ரூ.11,70,000
மொத்தப் பரிசுகள் 7965
மொத்தம் 3 வரிசைகள் CE, CF, CG.

பரிசுச் சீட்டின் விலை ரூ. 1/- மட்டும்




வெளியீடு:
இயக்குநர்,

## தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

அரசினர் தோட்டம், சென்னை-600 002.







# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை
# விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517



# வறுமையை நீக்கி வளமையை நிறைகக வழி வகுப்போம்!

மேன்மை தங்கிய சட்டமன்ற உறுப்பினர்களே!

சட்டமன்றத்தின் இணைந்த கூட்டத்திற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும், ஏற்படும் பொருளாதார வளர்ச்சி சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு மற்றவர்களை விட அதிகமாகப் போய்ச் சேர்ந்து அதன் விளைவாக வறுமை ஒழிப்பும், ஏற்றத் தாழ்வுகளின் குறைப்பும் ஏற்பட வேண்டும் என்பதும், இத்தகைய முயற்சிகள் மக்கள் அனைவரின் அடிப்படைச் சுதந்தரங்கள் குன்றாத வகையில் அமைய வேண்டுமென்பதும் நமது அடிப்படை இலட்சியமாகும்.

எழுத்துச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிட்டியுள்ளது. இவற்றை அனுபவிக்கும்போது பிறருக்கு ஊறு நேரா வண்ணம், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில், ஒவ்வொருவரும் செயல்படவேண்டுமென்பதை நாம் அனைவரும் மறந்து விடலாகாது. அவ்வாறு ஒருவருக்கொருவர் இணைந்து வாழும் முறையிலேயே, ஒருவருக்கொருவர் உதவும் வழியிலேயேதான் பொருளாதார சுதந்தரத்தை அடைவதற்கு நம்மால் முடியும். பொருளாதாரச் சுதந்தரத்தை ஒவ்வொருவரும் பெற, சுவைக்க, பல்வேறு முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபட்டு, திட்டங்கள் பலவற்றை, அதிலும் குறிப்பாக சமுதாயத்தில் பிற்பட்டோர், கிராமப் பகுதி வாழ் மக்கள் ஆகியோர்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்தி வருகின்றது. இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்குச் சமுதாய வாழ்வில் ஒழுங்கும், கட்டுப்பாடும், அமைதிச் சூழலும் உருவாக்க அனைவரும் பாடுபடுவது இன்றியமையாததாகும்.

சென்ற ஆண்டு விவசாய விளைபொருள் உற்பத்தியில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு போன்ற பல்வேறு விளைபொருள்களிலும் உயர்ந்த உற்பத்திச் சாதனைகளை நமது மாநிலம் எய்தியுள்ளது. விவசாய இடு பொருள்களைத் தக்க தருணத்தில் அளிப்பதன் மூலமும், நம்மிடம் உள்ள நீர் ஆதாரங்களை நன்கு பயன்படுத்துவதன் மூலமும், விரிவாக்கப் பணிகளைச் செம்மையாக நடத்துவதன் மூலமும், இந்த ஆண்டு இம்முயற்சியில் தொடர்ந்து இன்னும் அதிக உற்பத்தி அளவுகளை அடைவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. சென்ற ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைக்கான தனி இயக்குநரகம் ஒன்று உருவாக்கப்பட்டது.

மாவட்டங்களிலுள்ள பல்வேறு வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் உறுப்பினர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பதவிக் காலம் முடிவுற்ற போதும் மறு தேர்தல்கள் நடத்தப்படாததால், தொடர்ந்து பதவி வகித்து வந்தார்கள். விற்பனைக் குழுக்களின் நிர்வாகத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாலும், உறுப்பினர்கள் போதுமான அளவு அக்கறை எடுத்துக் கொள்ளாததாலும், வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தை விரிவாகத் திருத்தும் வரை காத்திராமல், குழுக்களைக் கலைத்து விட்டு அவசரச் சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பதிலாகச் சட்ட வரைவு இக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

நமது மாநிலத்தில் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்து வருகிறது. உணவுப் பொருட்கள் வெளிச் சந்தையில் நியாயமான விலையில் எளிதாகக் கிடைக்கின்றன. வரும் குறுவைப் பயிரும் நன்கு அமையுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், அடுத்த ஓர் ஆண்டில் பொது விநியோகத்திற்குத் தேவைப் படும் அளவு அரிசியை அரசு கையிருப்பாகவும் வைத்திருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்த அளவு திருப்திகரமான உணவு நிலைமை இருந்ததில்லை என்று கூறுவது மிகையாகாது. அரசு எடுத்து வந்துள்ள விழிப்பான நடவடிக் கைகளின் விளைவாகத் தேவையான பண்டங் களின் விலைகள் பொதுவாகக் கட்டுக்குள்ளேயே இருந்து வருகின்றன. ஒரு ஆண்டுக்கு முன் கடலை எண்ணெய் விலை பெரிதும் உயர்ந் திருந்தது; அது தற்போது கட்டுக்குள் இருந்து வருகிறது. நல்லெண்ணெய் விலை கடந்த சில மாதங்களாக வெகுவாகக் குறைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளைவிட இந்த ஆண்டில் வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையும் குறைந்துள்ளது.

விவசாய விளைபொருட்களை நன்கு உற் பத்தி செய்வதற்கு ஏற்ற வண்ணம், அவை களுக்கு நியாயமான விலை கொடுப்பதன் அவசி யத்தை அரசு உணரத் தவறவில்லை. முக்கிய மாக, நெல் விநியோகிப்போருக்கு நியாயமான அடிப்படையில் கொள்முதல் விலை நிர்ணயிக் கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு மத்திய அரசுடன் பல முறை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. அண்மையில் கூட் டப்பட்ட தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டிலும், நெல்லுக்கு நியாயமான விலை கொடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டது. அரசு, இதனடிப்படையில் நெல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம், நெல் நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி விட்டது. வரும் குறுவைப் பருவத்திலும் இது தொடர வேண்டும் என்பதே இந்த அரசின் கொள்கை யாகும். மேலும், முதன் முறையாக, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் நேரடியாக விவ சாயிகளிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல்லை விலைக்கு வாங்கி வருகின்றது. இதன் விளைவாக உற்பத்தியாளர் களுக்கு நியாயமான விலை கிட்டுமென்று அரசு நம்புகின்றது.

சென்ற எனது உரையின்போது, தமிழ் நாட்டில் அப்போது ஏறக்குறைய 9,300 நியாயவிலைக் கடைகள் இருந்தன என்றும், அந்த வசதியை மேலும் விரிவாக்கி தமிழ் நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ் வொன்றிலும் நியாயவிலைக் கடைகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறி வித்திருந்தேன். ஒன்பது ஆயிரத்திற்கு மேற் பட்ட நியாய விலைக் கடைகளில் இதுவரை நான்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட கடைகள், பல பொருள்களையும் விற்கும் கடைகளாக இத்திட்டத்தின் அடிப்படையில் மாற்றப்பட் டுள்ளன. மேலும், சுமார் 1,500 புதிய கடைகள் கூட்டுறவுகளின் மூலமும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமும் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் வாயிலாக திருநெல் வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங் களில் எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் மக்க ளின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் பல பொருள்களையும் விற்கும் நியாய விலைக் கடைகள் செயல்படத் துவங்கி விட்டன.

அடுத்த கட்டமாக சேலம், தர்மபுரி, கோவை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் 2,000க்கு மேற்பட்ட கூட்டுறவுக் கடைகள் பல்பொருள் விற்பனை நியாயவிலைக் கடைகளாக மாற்றப் படுவதோடு, 2,500க்கு மேற்பட்ட புதிய கடைகளைத் திறப்பதற்கென நடவடிக்கை களும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய பால் வள நிறுவனத்தின் ஒத்து ழைப்புடன், இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கி வருகின்றது. இந்த ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பின், மொத்தம் பத்து இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட 4,600 பால் உற்பத் தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும். இப்போதுள்ள பால் சேகரிக்கும் அளவு, இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக கிராமப் புறங்களில் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக் கப்பட்டு, தொடர்ந்து கிராம மக்களுக்கு, அதிலும் குறிப்பாக ஏழை விவசாயிகளுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும், அதிக வருமானம் அதன் மூலம் கிடைக்கும். பால் உற்பத்தி யுடன் இணைந்த பொருள்களான பால் பொடி, வெண்ணெய் போன்ற பிற பொருள்கள் உற்பத்தி செய்வதற்கும் இதன்கீழ் வழி செய்யப்படும்.

# தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டவையில் மேதகு ஆளுநர் உரை

மழை வளம் காப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பல மூலப் பொருட்களை அளிப்பதற்கும் காடுகள் ஆதார மாக விளங்குகின்றன. எனவே, காட்டு வளத்தைப் பெருக்குவதிலும், அதனைப் பாது காப்பதிலும், அரசு பல நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் காற்றுத் தடுப்பாக, காடுகள் வளர்ப்பதற்கான புதிய திட்டம் ஒன்று மொத்தம் மூன்று கோடி ரூபாய்ச் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 26 இலட்சம் ரூபாய் செல வில், 1,500 எக்டேரில் காடுகள் வளர்க்கப் படும்.

மூலப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்யும் இடங்களாகக் கிராமங்களும், அவற் றிலிருந்து மற்றப் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களாக நகரங்களும் இருக்கும் நிலை மாறினாலொழிய, கிராமங்கள் வளர்ச்சி யடைய வழியில்லை; வேலை வாய்ப்புகள் பெரு மளவில் பெருகுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவே, வேலை வாய்ப்புகள் பெருகுவதற்கேற்ற வண்ணம், கிராமத் தொழில்களை உருவாக்க முயற்சிகள் செய்ய வேண்டும். அதற்கேற்ற முதலீடுகள் கிராமப் பகுதிகளில் நடைபெற ஊக்குவிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசு பயன்படுத்தும் பொருட்களைக் கிராமத் தொழில்கள் செய்ய ஊக்குவிப்பதுடன், அர



> நான் திராவிடர் சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

சும், அரசு நிறுவனங்களும் அவற்றை வாங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்கு உதவும் வகையில், சிறப்பான திட்டங்கள் பலவற்றைக் கதர்-கிராமத் தொழில் வாரியம் ஆர்வமுடன் செயல்படுத்தி வருகின்றது. இம்முயற்சிகளின் விளைவாக இந்த ஆண்டில் 30,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கிராமத் தொழில் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்துவதற்கு வகை செய்யும் பொருட்டு, கதர்-கிராமத் தொழில் வாரியத்தை இரண்டாக விரிவாக்கி, கதர் உற்பத்தியைக் கவனிப்பதற்கு ஒரு அமைப்பும், கிராமத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு மற்றொரு அமைப்பும் உருவாக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மத்திய கதர்-கிராம ஆணைக் குழுவின் அனுமதி பெற்று, இந்தப் புதிய அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பட்டு நெசவுத் தொழில் மிகவும் தொன்மையானது. இதற்கு வேண்டிய பட்டு நூலை, வெளி மாநிலங்களிலிருந்தே பெரும்பாலும் நாம் பெற்று வருகின்றோம். அண்மைக் காலத்தில் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக, மலைப்பாங்கான பகுதிகள் மட்டுமன்றி, சமவெளிகளிலும் பட்டுப் புழு வளர்ப்பதை நல்ல முறையில் நடத்த முடியும் என்று கண்டறிந்துள்ளோம். இதனடிப்படையில், பட்டுப் புழு வளர்ப்பதற்கும், பட்டு நூல் எடுப்பதற்குமான சிறப்பான முயற்சிகளை அரசு எடுத்து வருகின்றது. கடந்த ஓராண்டில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக, சுமார் 20,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டுள்ளன வென்று கணக்கிடப்படுகிறது.

50,000 மக்கள் தொகைக்கு மேற்படாத ஊர்களில், கருவிகள், இயந்திரங்கள் இவற்றின்மீது ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத முதலீடு உடைய சின்னஞ் சிறு தொழில்களுக்கு உதவும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், இந்த நிதி ஆண்டு முடிவுக்குள் மொத்தம் 900 சிறு தொழிற்கூடங்களை அமைப்பதென்று முடிவு செய்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்தத் தொழிற்கூடங்கள் சிறு தொழில்கள் நடத்துபவர்களுக்கு தவணைக் கொள்முதல் முறையில் விற்கப்படும். இவ்வாறு கிராமக் கைத்தொழில்கள், பட்டுத் தொழில், சிறு தொழில்கள், சின்னஞ் சிறு தொழில்கள் ஆகிய துறைகளில் எடுக்கப்படும் பரவலான முயற்சிகளின் விளைவாக ஓராண்டுக் காலத்தில் மொத்தம் ஒரு இலட்சம் பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பலனாகச் சுமார் 25,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சென்ற ஆண்டு வரை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில், பெரிய தொழில்களுக்கு மட்டுமே வட்டியில்லாக் கடனாக, விற்பனை வரி, சில விதிகளுக்கு உட்பட்டுத் திருப்பித் தரப்பட்டு வந்தது. இத்திட்டம், இப்போது சிறு தொழில்களும் பயனடையும் வண்ணம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, மாநிலம் முழுவதிலும், பெருநகர வளர்ச்சிப் பகுதிகள் நீங்கலாக, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள பகுதிகளில் சிறு தொழில்களை அமைப்பவர்களுக்கு, விற்பனைவரிக் கடன்கள் வழங்கப்படும். இதன் மூலம் சிற்றூர்களிலும், கிராமங்களிலும், சிறு தொழில்களைத் தொடங்கப் பலருக்கும் ஊக்கம் பிறக்கும் என்று அரசு கருதுகிறது. கிராமத் தொழில், சிறு தொழில் வளர்ச்சிக்குச் சிறப்புக் கவனம் செலுத்தும் அதே நேரத்தில், சிமெண்ட், இரசாயனப் பொருட்கள் போன்ற அடிப்படையான பெருந்தொழில்களை நிறுவுவதிலும் அரசு தொடர்ந்து நாட்டம் செலுத்தி வரும்.

கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில், பத்துச் சதவீதம் நிகர வருவாய் வரும் இலாபகரமான மின் இணைப்புகளையே கொடுப்பது என்ற கொள்கையின் அடிப்படையில், மின் இணைப்புக் கொடுப்பது, இலாபகரமானதென்றோ அவ்வாறு இல்லையென்றோ முடிவெடுப்பதில் சிரமங்கள் இருப்பது அரசுக்குத் தெரிய வந்தது. எனவே, இனிமேல் இதை விட்டுவிட்டு, மின் இணைப்புக் கொடுப்பதற்கு விண்ணப்பம் கொடுத்த தேதியை அடிப்படையாகக் கொண்டு, முதலில் விண்ணப்பம் கொடுத்தவருக்கு முன்னதாகவும், பின்னால் விண்ணப்பம் கொடுத்தவருக்கு அதன் பின்னதாகவும், வரிசைக் கிரமப்படி மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, அண்மையில், மின் உற்பத்தி மீது முதல் முறையாக ஆயத் தீர்வை விதித்துள்ளது. மின்சாரம் உற்பத்தி செய்து வழங்குவதில் மின் வாரியங்கள் இலாபம் ஈட்டுவதில்லை என்பதை எடுத்துக் காட்டி, இந்த ஆயத் தீர்வை விதிப்பதைக் கைவிட வேண்டுமென்று நமது அரசு பலமுறை வலியுறுத்தியுள்ளது. பிற மாநில அரசுகளும் இவ்வாறே வலியுறுத்தின. எனினும் மத்திய அரசு, ஆயத் தீர்வை விதிக்கும் முடிவினை மாற்றாது, உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின்மீது ஆயத் தீர்வை விதித்துள்ளது. இதனை மத்திய அரசுக்குச் செலுத்தும் வகையில், சிறப்புக் கட்டணம் ஒன்றை விதிப்பதற்கான சட்ட வரைவு ஒன்று, அவையின் ஒப்புதலுக்காக இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

உலக வங்கி ஒத்துழைப்புடன், 147 கோடி ரூபாய்ச் செலவில், தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளும், பேரூராட்சிகளும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவதற்கும், கழிவு நீரகற்று வசதிகள் பெறுவதற்குமான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் வாழும் 75 இலட்சம் பேர், பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் பெற்றுப் பயனடைவார்கள்; 12 இலட்சம் பேர், புதைச் சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரகற்றும் வசதி பெறுவர்.

மராட்டிய, கர்நாடக, ஆந்திர மாநிலங்கள் மனமுவந்து சென்னைக்குத் தர இருக்கும் 15,000 மில்லியன் கன அடி நீரில், முன்னதாக விரைந்து தனது பங்கான 5,000 மில்லியன் கன அடி நீரைக் கொடுப்பதன் பொருட்டு, தொழில் நுட்ப ஆய்வு செய்ய ஒப்புக் கொண்டதற்கு ஆந்திர மாநில அரசையும், ஆந்திர முதலமைச்சரையும் பாராட்டுவது எனது கடமையாகும். கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான ஆய்வு வேலைகள், விரைவாக, ஆந்திர மாநிலப் பகுதியிலும், தமிழ்நாட்டின் பகுதியிலும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. குடியரசுத் தலைவர் ஆட்சியின்போதும், அதற்கு முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, காவிரி நீர்ப் பங்கீடு பற்றி இந்த அரசும் முனைப்பாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றது.

அண்டை மாநிலங்களுடன் நடந்து வரும் இப்பேச்சு வார்த்தைகளின்போது, பொது நன்மையை அடிப்படையாகக் கொண்டும், எந்த மாநிலத்திற்கும் பாதகம் ஏற்படாத வகையில் நல்ல தீர்வு காண வேண்டுமென்றும், தமிழ்நாட்டில் காவிரியின்கீழ்ப் பயிரிடப்படும் பரப்பளவு எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் முடிவுகள் இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. மேலும், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில், தேவைக்கு மேல் உபரியான தண்ணீரில், ஒரு பகுதியையேனும் தமிழகத்திற்குப் பெற்று இராமநாதபுரம் ,நெல்லை, கோவை மாவட்ட வறட்சிப் பகுதிகளுக்கு நீர் கிடைக்கச் செய்ய, அண்டை மாநிலங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைப் பெருக்கும் வகையில், ஆரம்பச் சுகாதார நிலையம் ஒவ்வொன்றிலும், தற்போதுள்ள இரண்டு மருத்துவர்களுடன் மேலும், ஒரு மருத்துவரை நியமிக்கும் திட்டத்தின்கீழ் மொத்தம் 230 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 100 நடமாடும் குழுக்களும் இவ்வாண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் தனி நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்பட்டு சிறு சுகாதார நிலையங்கள், புதிதாக 50 திறப்பதற்கும் அரசு இவ்வாண்டு அனுமதி அளித்துள்ளது. கண்ணொளி காக்கும் திட்டம் ஒன்று, மதுரையை மையமாகக் கொண்டு, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஐந்து பெரிய மருத்துவமனைகளிலும் 45 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் விரைவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் இந்த மாவட்டங்களிலுள்ள மக்களின் கண்ணொளி பழுதுபடாமல் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள், சிறப்பாக மேற்கொள்ளப்படும். உயிர் காக்கும் மருந்துகள், தேவையானவர்களுக்கு முறையாகச் சென்று அடைவதற்கும், அவை தவறான வழியில் வீணாகாமல் தடுப்பதற்கும், புதுமையான பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. மேலும், நாட்டு மருத்துவ முறையை மேம்படச் செய்யவும், சென்னை நகரிலுள்ள பெரிய மருத்துவ மனைகள் இயங்குவதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து களைவதற்கான அறிவுரைகள் வழங்குவதற்கும், இரண்டு சிறப்பான மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிநாடுகளிலே, அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகளிலே, புதிதாக ஏற்பட்டு வரும் வேலைவாய்ப்புகளை, தமிழ்நாட்டில் உள்ளவர்கள் முறையாகப் பயன்படுத்தி பலனடைவதற்கு வழி செய்யும் வகையில், அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (Overseas Employment Corporation) ஒன்றை அமைப்பதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. வேலை வாய்ப்பு பற்றிய சரியான விவரங்கள் தரப்பட்டு, வெளிநாடுகளில் சென்று வேலை செய்ய விரும்புவோரின் சிரமங்கள் குறையும் வகையிலும், அவர்கள் ஈட்டும் பணம் தமிழகத்தில் செம்மையாக முதலீடு செய்வதற்கு வழிவகைகள் செய்யவும் இந்த நிறுவனம் பாடுபடும்.

உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல் நடத்தும் பணியினை, மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்தியதன் மூலம், அரசு துவங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள், சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கான தேர்தல்களும் விரைவில் நடத்தி முடிக்கப்படும்.

வரவு-செலவுத் திட்டத்தின்போது, 400 உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு ஆண்டு மேற்படிப்புக்கான மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. கிராமப்புற மக்களின் நலனில் பெரும் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, இத்தகைய மேல்நிலைப் பள்ளிகளை 400-லிருந்து 916 ஆக உயர்த்தி, மேற்படிப்புக்கான வசதிகளை மாநிலம் முழுவதிலும் பரவலாக்கியுள்ளது பெருமைக்குரியதாகும். ஆண்டுத் துவக்கத்தில், பெற்றோர்களுக்கும் கல்வித் துறையைச் சார்ந்த விற்பன்னர்களுக்கும் இருந்த ஐயப்பாடுகள் நீங்கி, இன்று உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட இரண்டு ஆண்டுக்குரிய படிப்பைச் செயல்படுத்துவதில், தமிழக அரசு, மற்ற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது என மைய அரசு பாராட்டியுள்ளது, நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

சென்ற எனது உரையின்போது, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் இவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டு இருந்தேன். வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்களுக்கு ஒய்வூதியம் கொடுப்பது, காசி பல்கலைக் கழகம், விஸ்வபாரதி பல்கலைக் கழகம், குஜராத்திலுள்ள சர்தார் படேல்



ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நமது நாட்டில் தோன்றிய சீர்திருத்தக்காரர்களின் உழைப்புகள் பலன் தராததற்குக் காரணம், விட்டுக் கொடுக்கும் தன்மையும் தாட்சண்யமும் ராஜதந்திரச் செய்கையும் தான்.

பல்கலைக் கழகம், ஆக்ரா பல்கலைக் கழகம் முதலிய பல பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்கான மானிய உதவிகள் தருவதன் மூலமும், கிடைத்தற்கரிய சுவடிகளைத் திரட்டுவதன் மூலமும், தமிழ்க் கவிஞர் ஒருவரை அரசவைக் கவிஞராக நியமிப்பதன் வாயிலாகவும் இந்த அரசு தமிழ் மொழி வளர்க்கும் பணிகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றது. மேலும், பிற நாட்டு நல்லறிஞர் எழுதிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், அவ்வாறே தமிழ் இலக்கியங்களை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கவும் அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. சட்ட மொழி பெயர்ப்புக் குழுவின் காலத்தை நீட்டித்து, சட்டங்களை மொழி பெயர்க்கும் பணியும் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள் ஆழ்ந்து சிந்தித்து, பல நாள் விவாதித்து ஒரு மனதாக, மாநில அரசுகளின் பொறுப்பின் கீழ் கல்வி இருக்கும் வண்ணம், அரசியல் சட்டத்தை இயற்றினர்கள். அந்நிலை, இடையிலே மாற்றப்பட்டது. மீண்டும் 'கல்வி' மாநிலங்களின் பொறுப்பில் வரவேண்டுமென்ற இந்த அரசின் உறுதியான கருத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை, மத்திய அரசு மேற்கொண்டுள்ளதைப் பாராட்ட விரும்புகிறேன்.



உனக்குப் பெருமை வேண்டுமானாலும் உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக் கொள்.

மொழி, மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ள அடிப்படை உணர்வாகும். எனவே, மொழிக் கொள்கை மிகவும் கவனத்துடன் அணுக வேண்டிய ஒன்றாகும். தமிழகத்தின்மீது மொழித் திணிப்பு எந்த வகையில், உருவில், வழியில் வந்தாலும் சரி, அதனை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர், தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டி, தொடர்புடைய, முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருப்பது வரவேற்பிற்கும் பாராட்டிற்கும் உரிய ஒன்றாகும். இந்த மாநாட்டில் முதலமைச்சர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, சில மத்திய அமைச்சரகங்கள் பிரதமரது உறுதிமொழிக்கு மாறாக, இந்தியைத் திணிப்பதை எடுத்துக் காட்டி, பிரதமர் இதனைத் தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர், நமது பிரதமர், நாடாளுமன்றத்தில் யார் மீதும் மொழித் திணிப்பு இருக்காதென்றும் மொழி பற்றிய கொள்கையினைச் செயல்படுத்தும்போது, வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஊறு ஏதும் நேரிடாத வகையில் செயல்படுவோம் என்றும் அண்மையில் கூறியுள்ளதை இந்த அவைக்குக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

எனினும், பிரதமரின் வாக்குறுதிகளை மறுதலிக்கும் வகையில், மைய அரசின் சில அமைச்சரகங்கள் தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. சென்ற ஆண்டில் நான் குறிப்பிட்டது போல, தமிழக அரசு இரு மொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. அண்மையில், நாட்டின் கல்விக் கொள்கைப் பற்றி பல்வேறு மாநிலங்களின் கருத்தை ஆராயும் நேரத்தில், இருமொழிக் கொள்கையின்பால் நமக்குள்ள உறுதிப்பாட்டை அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நமது அனைவரின் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய, விடுதலைப் போராட்டத்தில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்தி, தியாகத்தின், நாட்டுப் பற்றின் இலக்கணமாகத் திகழ்ந்த, மறைந்த தலைவர் காமராசர் அவர்களின் நினைவாக, மதுரையில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு அவரது பெயரிடப்பட்டு இருப்பதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கிட, சமதர்மக் கோட்பாடுகள் மக்களிடையே மலர்ந்து மணம் பரப்பிட கடுமையாகப் பணியாற்றி, தமிழ்நாட்டு மக்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவராக வாழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் பெயர் தாங்கி உருவாக இருக்கும் ''பேரறிஞர் அண்ணா தொழில்—நுட்பவியல் பல்கலைக் கழகம்'' நமது நாட்டின் குடியரசுத் தலைவரால் அடுத்த வாரம் திறக்கப்பட இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளையும், நிறுவனங்களையும் இணைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் பல்கலைக் கழகம், தொழில் நுட்பக்கல்வியின் தரத்தை உயர்த்துவதோடு, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், அதன் விளைவாகப் பொருளாதார வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இயங்கும் என்பதில் ஐயமில்லை. கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு வலியுறுத்தி வருகின்றது. இதற்கான ஒப்புதலை பல்கலைக் கழக ஆணைக்குழு விரைவில் வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களின் நலன்களையும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களின் உரிமைகளையும் பாதுகாத்து வளர்ப்பதில் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, மூட நம்பிக்கைகளைச் சுட்டெரித்து, அறியாமைச் சேற்றில் நெளி புழுக்களாக வாழ்ந்திட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சமுதாய சீர்திருத்தத்தின் ''விடிவெள்ளி'' எனும் சிறப்பினைப் பெற்று, தனது இறுதி மூச்சிருந்தவரை தொடர்ந்து பணி மேற்கொண்ட பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் நினைவாக, மத்திய அரசு சிறப்பு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இதற்கு மத்திய அரசு தனது ஒப்புதலைத் தந்து இருப்பதை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன்.

அவரது சிறந்த பணியின் காரணமாக, நாட்டின் இந்தப் பகுதியில் சாதி, சமயச் சழக்குகளின்றி, அறிவார்ந்த முறையிலே அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான அமைதிச் சூழ்நிலை உருவாயிற்று என்றால் அது மிகையாகாது. ஆனால், சில சமூக விரோதிகள் ஆங்காங்கே சாதி வேறுபாடுகளைத் தூண்டிவிட்டு, ஒன்றுபட்டு வாழும் மக்களிடையே குழப்பதையும், உடைமைகளுக்குச் சேதத்தையும், உயிர்களுக்கு ஆபத்தையும் ஏற்படுத்த முயல்வதை எனது அரசு, நடு நிலை நின்று, உறுதியாகக் கண்டிக்கிறது. சமூக விரோதிகள் இவ்வாறு குழப்பம் விளைவிப்பதைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பையும் மன்ற உறுப்பினர்களனைவரும் தருவீர்கள் என்று நான் உளமார நம்புகிறேன்.

விழுப்புரத்தில் நடந்த துயரச் சம்பவம், நம் அனைவரையும் நடுங்க வைக்கின்ற ஒன்றாகும். அந்த எதிர்பாராத, விரும்பத்தகாத கலவரத்தின் மூலம் படுகொலைக்கு ஆளாகியவர்களுக்காக வருத்தத்தையும் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு நம் அனைவரின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குகின்றவர்கள் எப்படிப்பட்ட உயர்ந்த பதவிகளில் இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட வசதியும் செல்வாக்கும் பெற்றவர்களாக இருந்தாலும் சரி, சமூக விரோதத் தீமைகளில் ஈடுபடுவார்களானால், தயவு தாட்சண்யமின்றி, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு எக்காரணத்தைக் கொண்டும் அவர்களை மன்னிக்காது. இந்த துயர நிகழ்ச்சிகளை ஒட்டி துயர் துடைக்கும் முயற்சிகளுக்காக நிதி உதவி தந்த பிரதமர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும், தங்களாலான மற்ற உதவி செய்தவர்களுக்கும் இந்த அரசு நன்றி தெரிவித்துப் பாராட்டுகின்றது.

காந்தியடிகள் கனவு கண்டதற்கேற்பவும், அண்ணா அவர்கள் விழைந்ததற்கொப்பவும், நமது மாநிலத்தை இலஞ்ச ஊழலற்ற மாநிலமாக உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளது. நிர்வாகத்தின் எல்லா மட்டங்களிலும் இத்தீமையைக் களைந்தெறிய அரசு முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

அரசின் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்த எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப்பதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற மதுவிலக்கு மாநாட்டில் அவர்கள் அனைவரும் ஒத்துழைத்ததற்கு நன்றி கூற விரும்புகிறேன். மற்ற இடங்களில் அத்தகைய மாநாடுகள் நடத்த எடுக்கும் முயற்சிகளுக்கு, எல்லோரும் துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது அன்றி, சாராவி ( De natured Spirit ) வைத்திருந்து விற்பதற்கான உரிமரங்கள், அரசு பொது நிறுவனங்கள், கூட்டுறவுகள், தொழில் வணிக இயக்குநர், மத்திய தொழில் வளர்ச்சித் தலைமை இயக்குநர் ஆகியோரிடம் பதிவு செய்திருப்பவர்களைத் தவிர, மற்ற தனிப்பட்டவர்களுக்கு வழங்குவதைத் தடை செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டிலுள்ள நல்லோர் அனைவரும், ஏழை எளிய மக்களின் வாழ்வுக்கு வளம் கூட்டும் மதுவிலக்கினை நன்முறையில் செயல்படுத்த, மதுவிலக்குப் பிரசாரம் உட்பட தங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். அரசின் உயிர்க் கொள்கையான மதுவிலக்கை நிறைவேற்றுவதில், அண்மைக் காலமாக, உண்மையான பொறுப்புணர்வுடன் தங்கள் உயிரையும் துச்சமென மதித்து கடமையாற்றி வருகின்ற காவல் துறை அதிகாரிகளை இந்த நேரத்தில் பாராட்ட விரும்புகிறேன். ஏழை மக்கள் நலம் பயக்கும் மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றும்போது, மாநில அரசுக்கு ஏற்படுகின்ற மிகப் பெரிய நிதியிழப்பை ஈடுகட்டுவதற்கான சிறப்பான வழிமுறைகளைக் காண வேண்டும் என்று மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். அரசியலமைப்புச் சட்டத்தின் நெறி முறைகளைச் செயல்படுத்துவதில் ஆர்வமும் அக்கறையும் காட்டிய காரணத்தினால், தமிழகமும், குஜராத் மாநிலமும் பெருத்த வருவாயை இழக்க நேரிட்டுள்ளது.

எனவே, இந்த இழப்பின் விளைவாக, வளர்ச்சிப் பணிகளும், நியாயமான செலவினங்களும் குன்றிவிடாதபடி, மத்திய அரசு சிறப்பு நிதி உதவிக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று



ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ அப்படியே எல்லாரிடமும், தான் நடந்து கொள்வதே ஒழுக்கம் ஆகும்.

இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது. மத்திய அரசு, நமது மாநிலத்தின் பற்றாக்குறை நிதி ஆதாரங்களையும் கொள்கைப் பிடிப்பினையும் கருத்தில் கொண்டு, கணிசமான அளவுக்கு நிச்சயமாக நிதி உதவி வழங்கும் என்று நம்புகிறேன்; மறுக்கப்படும் நிலை ஏற்படாதென்று எதிர்பார்ப்போம்.

அண்டை மாநிலங்களுடன் தொடர்புள்ள பல பிரச்சினைகளைப் பற்றி, நட்பு உணர்வோடும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வகையிலும், அரசு, பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தி வந்திருப்பது, பாராட்டுதற்குரியதாகும். இதன் மூலம் மாநிலங்களிடையே உள்ள பிரச்னைகள் மட்டுமின்றி, நாட்டின் பொதுவான நன்மைக்குரிய பல்வேறு பிரச்சினைகளிலும் பொது கருத்துக்களை உருவாக்கிச் செயல்படவும் வழி வகை செய்யப்பட்டு இருக்கிறது.

அண்மையில், சென்னையில் முதன் முறையாக நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடும், அதைத் தொடர்ந்து வேறு பல மாநில முதல்வர்கள் கலந்து கொள்ள இருக்கும் முதலமைச்சர்கள் மாநாடும், நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்து, நாட்டின் ஒற்றுமைக்கும், மேம்பாட்டிற்கும் ஏற்ற பல கருத்துக்களையும் செயல்முறைகளையும் உருவாக்கும் என நம்புகிறேன். மண்டலக் குழுக்கள் ( Zonal Council ) கூட்டப்படாமல் இருந்து

[தொடர்ச்சி 28-ஆம் பக்கம்]

# குடியரசுத் தலைவரின் தமிழக வருகை!






"இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துக்கு அண்ணாவின் பெயரை வைத்ததன் மூலம் மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை முதலமைச்சர் கூறாமல் கூறியிருக்கிறார்" என்று சென்னை கிண்டியில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தைத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம். சஞ்சீவரெட்டி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

இந்தியக் குடியரசுத் தலைவர் செப்டம்பர் திங்களில் தமிழ்நாட்டில் மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார்.

செப்டம்பர் 4-ஆம் நாள் நடந்த பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்துக் குடியரசுத் தலைவர் திரு நீலம், சஞ்சீவரெட்டி அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"55 ஆண்டுகளுக்கு முன் இதே வீதியில் ஒரு பள்ளியில் நான் படித்ததை எண்ணிப் பார்க்கிறேன். அப்போது இந்தப் பொறியியல் கல்லூரி மட்டுமே இருந்தது.

"இப்போது பல விதங்களில் மாற்றம் ஏற்பட்டு உள்ளது. ராஜாஜி, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பிரகாசம், காமராஜ், அண்ணா போன்றவர்கள் தென்னாட்டுக்குக் கிடைத்த அரும் பெரும் தலைவர்கள்.

"அண்ணா அவர்களின் தாரக மந்திரமான கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு ஆகியவைகளின் வழியில் மாணவர்களாகிய நீங்கள் செயல்பட வேண்டும்.

"மாணவர்களாகிய நீங்கள் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும். நேரத்தை வீணடிக்கக்கூடாது."

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:



"இந்த நாட்டின் எதிர்காலம் இளைஞர்களாகிய உங்களைப் போன்றவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பொறுப்புடன் நீங்கள் நடக்க வேண்டியவர்கள் என்பதை எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது.

"உங்களுடைய எண்ணங்கள், வேறு எங்கோ இழுத்துச் செல்லப்படுவதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது. குறிப்பாக எந்த அரசியல் பிரச்சினைகளுக்கும் இடம் கொடுக்காதீர்கள். அரசியல் கட்சிகள் உங்களிடையே தலையிட்டு, அவர்களுக்கு நீங்கள் அடிமையாகக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி விடாதீர்கள்.

"அரசியல்வாதிகளை, உங்கள் தன்மைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயன்றி அவர்களுடைய இச்சைகளுக்கு உங்களை நீங்களே பலியிட்டுக் கொள்ளக்கூடாது.

"திறமை வாய்ந்த, ஆசிரியர்கள், பேரறிஞர்கள் நுண்ணறிவாளர்களைப் பின்பற்றிக் கல்வி கற்பதில் அக்கறை செலுத்திட வேண்டுமென்று மிகவும் பரிவுடன் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

" 2000 ஆண்டுகளாக வளராமல் இருந்த விஞ்ஞானம்-அறிவாற்றல்-20 ஆண்டுகளில் வளர்ந்துள்ளது என்பதை நினைத்துப் பெருமிதம் அடையும்போது, அதற்காக உழைத்த அறிஞர்களை நினைத்துப் பார்த்து, அவர்கள் சென்ற வழியில் தமது கடமையைத் தொடர மாணவர்களாகிய நீங்கள் முன்வர வேண்டும்.

"விஞ்ஞானத் துறையில் வழிகாட்டிகளாக இருந்த முன்னோர்களின் கருத்துக்களை உறுதுணையாகக் கொண்டு எதிர்கால மக்களின் வாழ்வு வளம்பெற இளைஞர்கள் பாடுபட வேண்டும்.

"நீங்கள் எந்தெந்தச் சூழ்நிலையில் கல்வி கற்க நேர்ந்தாலும் கல்வி கற்றுத்தரும் ஆசிரியர்களை மதித்து, அவர்களுடன் நீங்களும் ஒத்துழைக்க வேண்டும்-ஆசிரியர்கள் அனைவரையும் போற்றி, மதித்து நடக்க வேண்டும்.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் சமுதாயத்தில் மறுமலர்ச்சி காண வேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுதும் அயராது பாடுபட்டார். அவரது பெயரால் அமைந்துள்ள கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அண்ணாவின் கொள்கை—அறிவுரைகளைக் கடைப்பிடித்து நாட்டு முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்; உங்களுடைய அறிவும், ஆராய்ச்சித் திறனும் இந்நாட்டிற்குப் பயன்பட வேண்டும்."

மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.:

"அதிகப்படியான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்



என்ற கொள்கையைவிட, அதிகப்படியான மக்களால் உபயோகிக்கப்படக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் கொள்கையே அதிகமான மக்களைக் கொண்ட இந்தியாவுக்கு ஏற்றது என்ற மகாத்மா காந்தியின் கொள்கையை மனத்திற்கொண்டு அதற்கேற்றாற்போல் மாணவர்களுக்குப் பயிற்சி தரும் முயற்சியில் தொழில் நுட்பக் கழகங்கள் செயல்பட வேண்டும்.''

விழாவில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், ''தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் நிர்வாகத் தலைமைப் பீடங்களாக மட்டும் இருக்காமல் அறிவுத்துறையின் தலைமையிடமாகவும் செயல்பட்டு வருகிறது எனக் கூறினார். ''பல புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கிட, தக்க பயிற்சி அளித்திடும் நிலையமாகப் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் விளங்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் அமைச்சர்கள், மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள், மத்திய அரசு கல்வித் துறைச் செயலாளர் திரு பி. சபாநாயகம் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள். சென்னைப் பல்கலைக் கழகப் புதிய துணை வேந்தராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்கள், சென்னை நகர ஷெரீப் திரு சையத் யூசுப் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு பி. சிவலிங்கம் அவர்கள், புதிய பல்கலைக் கழகம் குறித்த அறிக்கையைப் படித்தார். விழாவில் கலந்து கொண்டவர்களை அரசு கல்விச் செயலாளர் திரு. சி. ஜி. ரங்கபாஷ்யம் அவர்கள் வரவேற்றார்கள்.

### பாலமந்திர் சிறுவர் அனாதை விடுதி

சென்னை தேனாம்பேட்டையிலுள்ள பாலமந்திர் அனாதைச் சிறுவர் விடுதி, அதன் சார்பு நிலையங்களான கல்விக் கூடங்களை பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நினைவாகக் காணிக்கையாக்கும் விழா செப்டம்பர் 4-ஆம் நாள் சிறப்பாக நடந்தது.

இவ்விழாவில் கலந்துகொண்ட குடியரசுத் தலைவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:



''காமராஜ் மெத்தப் படித்த மேதையோ, பணக்காரரோ அல்ல. அப்படியிருந்தும் அவரை மக்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்கு அரவது உண்மையான பணியும் நேர்மை, நாணயம் ஆகியவைகளும்தான் காரணமாகும்.

ஒரு சாதாரணக் குடிமகனும் நாட்டுக்குச் சேவை செய்ய முடியும் என்பதை இந்திய ஜனநாயகம் நிரூபித்துள்ளது. காமராஜ் ஏழைகள் யாராக இருந்தாலும் நேசித்தார். அவர்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்பினார். அவர் திருமணமாகாதவர்தான். ஆயினும் ஏழைக் குழந்தைகளை அவர் மிகவும் நேசித்தார்.

''ஜாதி மத அடிப்படையில் அந்த நேசத்தை அவர் வைத்துக் கொண்டதில்லை. ஜாதிப் பாகுபாடு நாட்டுக்கு ஆபத்து என்று அவர் சொல்லுவார். ஆனால் இன்று நாட்டில் என்ன நடைபெறுகிறது?

ஏழைகளின் வாழ்க்கையைக் கவனிக்காமல் போனால் அமைதி ஏற்படுமா?

நாம் உதவி செய்யும்போது ஜாதிப் பிரிவை மட்டும் கவனித்தால் போதுமா? ஏழைகள் யாரோ, தேவை யாருக்கோ, அவர்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டும். இது காமராஜரின் விருப்பமாகும்.''

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 'பாலமந்திர்' தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

''குழந்தைகள் தொடக்கத்தில் எப்படி வளர்க்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவர்கள் வாழ்வு அமைகிறது. அந்தக் குழந்தைகளின் வளர்ச்சியிலிருந்துதான் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

''தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பண்பட்டவர்களாக வெளிவர வேண்டும். இந்த அமைப்புகள் நிம்மதியாக இயங்க-நிலைமை, சூழ்நிலை சிறப்பாக அமைய எண்ணுவது எங்களது சிறப்பான கடமை ஆகும்.

''தமிழக அரசு பாலமந்திருக்குக் கடனாகக் கொடுத்த ரூ. 2 இலட்சம், மானியமாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அமைப்பு



யாரிடமும் கையேந்தாமல் இருக்குமளவிற்கு தமிழக அரசு பார்த்துக் கொள்ளும்.

"எத்தனை கோடி ரூபாய் கல்விக்குச் செலவழித்தாலும் அது நமது சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டு."

மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் ஜி. ராஜகோபாலன் நினைவு திறந்தவெளி அரங்கத்தையும், நூல் நிலையத்தையும் திறந்து வைத்துப் பேசினார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கி பாலமந்திர் சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

**இந்து நூற்றாண்டு விழா !**

"இந்து" பத்திரிகையின் நூற்றாண்டு விழா சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் செப்டம்பர் 4-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமையில், குடியரசுத் தலைவர் இந்த விழாவைத் தொடங்கி வைத்து 'இந்து பத்திரிகையின் நூற்றாண்டு வரலாறு ப்ற்றிய புத்தகத்தை வெளியிட்டார். முதல் பிரதியை முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பெற்றுக் கொண்டார்.

**ராஜாஜி நூல் வெளியீட்டுவிழா :**

உப்புலூரி காளிதாஸ் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ராஜாஜி பற்றிய புத்தகத்தின் வெளியீட்டு விழா கிண்டி, ஆளுநர் மாளிகையில் நடந்தது. இந்த விழாவிற்கு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமை தாங்கினார். புத்தகத்தை வெளியிட்டு, குடியரசுத் தலைவர் அவர்கள் பேசுகையில் "ராஜாஜியுடன் பலமுறை சிறைத் தண்டனை அனுபவித்தவன். சிறைச்சாலையில் இருந்தபோது ராஜாஜியிடம் இருந்து ஏராளமான பாடங்களைக் கற்றுக் கொண்டேன். பள்ளிக்கூடத்திலும், கல்லூரியிலும் பல்கலைக் கழகத்திலும் படிக்க முடியாத வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களை ராஜாஜியிடமிருந்து அனுபவ பூர்வமாகக் கற்றுக் கொண்டேன்" என்றார்.

**குமாரசாமி ராஜா**
**சிலை திறப்பு விழா !**

இராஜபாளையத்தில் முன்னாள் முதல்வர் பி. எஸ். குமாரசாமி ராஜாவின் திருவுருவச் சிலையைக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார். குமாரசாமி ராஜாவின் நினைவாகக் கட்டப்பட்டுள்ள வளைவைத் தமிழக ஆளுநர் அவர்கள் திறந்து வைத்தார். விழாவுக்கு, முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை தாங்கினார். சிலை திறப்பு விழா மலரை மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் வெளியிட்டார்.

**'காந்தி கிராமத்தில்'**

மதுரை மாவட்டத்தில் இரு நாட்கள் சுற்றுப்பயணம் செய்த குடியரசுத் தலைவர் அவர்கள் காந்தி கிராமத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டார்.

புதிய மருத்துவமனைக் கட்டடத்தைக் குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார்.

காந்தி கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குப்போய் கிராமங்களுக்குச் சிகிச்சை அளிக்க ஒரு நடமாடும் மருத்துவமனை வேண்டும். காந்தி கிராமத்திற்கு சிகிச்சைக்கு வரும் புறநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் புதிய கட்டடம் அமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கைகள் விடப்பட்டன.

"இந்த இரு கோரிக்கைகளையும் தமிழக அரசு உடனடியாக நிறைவேற்றி வைக்கும்" என்று விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சவுந்தரராசன் அவர்கள் அறிவித்தார். முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் அனுமதி பெற்று இதனை அறிவிப்பதாகவும் அவர் கூறினார்.

கோரிக்கைகளை உடனடியாக முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்ட முறை குறித்துக் குடியரசுத் தலைவர் அவர்கள் தனது உரையின்போது மிகவும் பாராட்டினார்:—

"சில கோரிக்கைகள் இங்கு எழுப்பப்பட்டன. அவைகளில் பெரும்பாலானவற்றை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டதன் மூலம் முதல் மார்க் வாங்கிவிட்டார்."

விழாவில் முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில், "எந்த வேறுபாடும் இல்லாமல் தேவைப்படுவது அளிக்கப்பட வேண்டும் என்ற ஜாதிமத பேதமற்ற காந்திஜியின் சமுதாயத்திற்குக் காந்தி கிராமம் ஓர் எடுத்துக்காட்டு" என்றார்.

விழாவில் மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்.

**மதுரை மாநகராட்சி வரவேற்பு:**

மதுரை மாநகர மேயர் திரு. முத்து அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு மாலை அணிவித்தார்.

மதுரை மாநகராட்சிச் சார்பில் குடியரசுத் தலைவர் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு ஒன்றும் அளிக்கப்பட்டது.

[23-ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் நிலையில், இவ்வாறு முதலமைச்சர்கள் கூடிப்பேசுவது சாலப் பொருத்தமானதாகும்.

புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில், வறுமையை ஒழிப்பதும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதும் முக்கிய குறிக்கோள்களாக அமைந்துள்ளன. இவற்றை நிறைவேற்றும் பொறுப்பில், மாநில அரசுகளும், மத்திய அரசும் சமபங்காளிகளாகச் செயல்படுகின்றனவென்றாலும், இப்பணியில் மாநிலங்களின் பொறுப்பே மிகுதியானது. இந்தப் பின்னணியில், மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை கூடுதலாகத் தரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று, அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சி மன்றக் குழுவின் கூட்டத்தில் நமது அரசு எடுத்துரைத்துள்ளது. சட்டப்படி மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வருகின்ற மானியங்களை உயர்த்த வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும், மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள வேளாண்மை, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளின்கீழ், மத்திய அரசு நாடு முழுமைக்குமாக சிறப்புத் திட்டங்கள் பலவற்றை தீட்டி, மாநிலங்கள் அவற்றைச் செயல்படுத்தும் நிலைமாறி, இந்தத் துறைகளில் மத்திய அரசு தீட்டும் திட்டங்கள் மிகக் குறைவாக இருக்க வேண்டுமென்று 1968-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய கருத்து, மீண்டும் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்திக் கூறப்பட்டது.

மாநிலங்களுக்கு வருவாய் தரக்கூடிய முறையில், மத்திய அரசு வரி விதிக்கக்கூடிய, நிதி தரக்கூடிய பல்வேறு இனங்களின் கீழும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் எல்லா மாநிலங்களும் எடுத்துக் காட்டியுள்ளன. இவற்றின் விளைவாக, மாநில அரசுகளுக்கு சட்ட ரீதியான முறையிலும், மற்ற வழிகளிலும் கூடுதல் நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலங்கள் வளமான நிதி ஆதாரத்துடன் செயல்படுவதே, நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும்; மத்திய அரசையும் மேலும் வலிமையுள்ளதாக அமைக்க உதவும்.



நாட்டில் மனித சமுதாயத்தில் எத்தனை பேர் நம்புகிற காரியமானாலும் கருத்தானாலும், எத்தனை பேர் நடத்தி வருகிற காரியமானாலும் அவைகளைப் பற்றி எல்லாம் சிந்திக்காமல், அவைகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் ஒவ்வொரு கருத்தையும் தன் பகுத்தறிவைக் கொண்டும் பிரத்தியட்ச அனுபவத்தைக் கொண்டும் சிந்தித்து ஆராய்ந்து தெளிவு பெற்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.



மனிதன் என்பதற்கு அறிகுறி, அறிவு, ஆராய்ச்சி அனுபவத்தால் தன்னால் விளங்கிக் கொள்ள முடியாத எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாதவன் என்பதைத் தான் பொருளாகக் கொள்ள வேண்டும்.

நிர்வாக இயந்திரத்தைச் செம்மைப் படுத்தி, மக்களின் தேவைகளுக்கேற்ற வண்ணம் விரைந்து செயல்படுத்துவதற்கேற்ற வகையில், பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது. மேலும் அரசு, அலுவலர்கள், தங்கள் குறைகளைத் தக்க முறையில் எடுத்துரைக்க வாய்ப்புக்கள் தரும் வகையில், அரசுச் செயலாளர்கள் மட்டத்திலும், அந்தந்தத் துறைத் தலைவர்கள் மட்டத்திலும், அலுவலர்கள், அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழுக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, அண்மையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், அரசு அலுவலர்கள் பணி புரிவதுபற்றிய பல்வேறு விதிகளை ஆராய்ந்து, சீரமைப்பதற்காகத் தனிக் குழு ஒன்றையும் அரசு நியமித்துள்ளது.

அண்மையில் அளிக்கப்பட்டுள்ள சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, அவசர அனுதாப உணர்வுடன், இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. விரைவில் இப்பரிந்துரைகளின் மீதான அரசின் முடிவுகள் வெளியிடப்படும். சென்ற எனது உரையில் குறிப்பிட்டதுபோல, ஏழை எளியவர்களுக்குச் சட்ட சம்பந்தமான உதவிகள் செய்வதற்காக, மாவட்டங்கள் அனைத்திலும் சட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை நன்கு பணியாற்றத் துவங்கியுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன். நீதிபதி திரு. இஸ்மாயில் அவர்களின் அறிக்கையை ஒட்டி, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டுள்ள இந்த அரசு, நிச்சயம் முறையான முடிவுகளை எடுக்கத் தவறாது.

சில நாட்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. விவாதத்திற்கு முக்கியமான சட்டப் பணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தனக்கெனத் தனித்தன்மையையும், மரபையும், மங்காப் புகழையும் பெற்றிருக்கின்ற தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள், அவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பையும், ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். நமது மாநில மக்கள் வளம் பெருகி, மகிழ்வுடன் வாழ்வதற்காக நீங்கள் அனைவரும் மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகள் வெற்றிபெற உங்களனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வணக்கம்.

[தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவைக் கூட்டத்தில் ஆளுநர் 30—6—1978 அன்று ஆற்றிய உரை].

# கலைவாணர் நினைவுநாள் விழா



ஆகஸ்ட் 30-ஆம் நாள்.

தமிழகத்து மக்களைத் திரைப் படத்தின் மூலமாகச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்து, சீர் திருத்தக் கருத்துக்களைப் புகுத்திச் சமுதாயப் புரட்சி செய்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் நினைவுநாள்.

இந்த ஆண்டு அவரது நினைவு நாளை இயல், இசை, நாடக மன்றம் சென்னை கலைவாணர் அரங்கில் 30-8-78 அன்று கொண்டாடியது.

விழா, காலை 10 மணிக்குத் தொடக்கம் ஆகியது. திரு சி.எஸ் பாண்டியன் அவர்கள், 'நகைச் சுவைக் கதம்பம்' என்ற தலைப்பில்-கலைவாணர் பாடிய பாடல் களைத் தொகுத்து, விளக்கவுரை களுடன் நடத்திய நிகழ்ச்சி அனை வரின் பாராட்டையும் பெற்றது.

பின்னர் கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி தொடக்கவுரை நிகழ்த்த, கவிஞர் சுரதா அவர் களின் தலைமையில் 'கவிஞர் நெஞ்சில் கலைவாணர்' என்னும் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் கே. ப. பெருமாள், புத்தனேரி சுப்ரமணியன், நாரண துரைக்கண்ணன், வேழவேந்தன், வானம்பாடி, திருமதி பொன்மணி வைரமுத்து, எஸ். டி. சுந்தரம், அப்துல் ரகுமான் ஆகிய கவி ஞர்கள் பங்கேற்றனர்.

பிற்பகல் 6 மணிக்கு குல தெய்வம் ராஜகோபால் நடத்திய 'கலைவாணர் கதை'—வில்லுப் பாட்டு மிகச் சிறப்பாக அமைந்தது.

நரிக்குறவ வகுப்புக் குழந்தை களின் நாட்டிய நிகழ்ச்சிக்குப் பின்னர், மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் தலைமையில் கருத் தரங்கம் தொடங்கியது. மாண்பு மிகு நிதி அமைச்சர் கி. மனோ கரன் அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்த அனை வரையும் வரவேற்றுப் பேசிய தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் திரு டி.வி. நாராயணசாமி. தமது உரை யில் குறிப்பிட்டார்.

''தமிழக அரசின் ஆணை பெற்று-அரசின் சார்பில் கலை வாணர் நினைவு நாளை-தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கொண்டாட முன் வந்திருக் கிறது. கலைவாணரின் நினைவு நாளை எந்தெந்த வகையில் போற்ற வேண்டுமோ. அந்தந்த வகையில் எல்லாம் போற்று வதற்கு தமிழ்நாடு, இயல், இசை நாடக மன்றம் அரசின் சார்பில் முன்வந்திருக்கிறது.

''வாழையடி வாழையென வந்த திருக்கூட்டக் கலைஞர் மரபி னில் கலைவாணர் தனி இடம் பெற்றுப் பிரகாசித்துக் கொண் டிருக்கிறார். நமது சமுதாயத்தை இலட்சிய வாழ்வுள்ள சமுதாய



மாக ஆக்கி-சமுதாய சீர்திருத்தத்தை உருவாக்கி-சேவை செய்பவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த ஒப்பற்றவர் கலைவாணர்!''

இந்தக் கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு நிதி அமைச்சர் திரு கி. மனோகரன், தொடக்க உரையில் குறிப்பிட்டார்:

''இங்கே வில்லுப்பாட்டிலே கலைவாணரின் தனித்தனிச் சிறப்பை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவரது மனிதாபிமான உணர்வை-மனிதத் தன்மையைக் கோடிட்டுக் காட்டினார்கள். நான் அந்த இடத்திலிருந்து தான் கலைவாணரைக் கவனிக்கிறேன்.

''இன்னார் இனியார் என்று அவர் பார்த்ததில்லை. எங்கே அறிவு-திறமை-இவை உள்ளதோ அங்கு அதை ஓடிச்சென்று ஏற்றுக் கொள்வதில் அவர் முன்னோடியாக விளங்கினார்.

''இலட்சக் கணக்கில் பணம் சம்பாதித்தார். அதனைப் பிறருக்கு வாரி வாரி வழங்கினார். கேட்டவர்களுக்கெல்லாம் வழங்கினார். அதனால்தான் அவர் நிற்கிறார்.. நம் நெஞ்சத்திலே, நிலைத்துவிட்டார் - நீங்காதிருக்கிறார்.

''அமெரிக்கா பற்றி ஓர் இளம் புலவன் சொன்னான்:

மாட மாளிகையல்ல பெரிது
கூட கோபுர மல்ல பெரிது
விண்மூட்டும் கட்டடம் அல்ல பெரிது.
கண்கவரும் பூங்கா அல்ல பெரிது!
இதயம்தான் பெரிது—
இரும்புப் பெட்டி அல்ல!
மனம்தான் பெரிது
மற்றவை அல்ல.....!

''அந்த வகையில், கலைவாணர், மனம் படைத்தவராக-இதயம் உள்ளவராக விளங்கினார்.''

பின்னர் திரு ஏ. ஆர். மாரிமுத்து எம். எல். ஏ. உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

'கலைஞர்களிலேயே, மக்களை ரசிக்க வைக்கவும் சிந்திக்க வைக்கவும் கூடிய சக்தி என். எஸ். கே. அவர்களிடம் இருந்தது. அவர், சுதந்திர இயக்கத்துக்கு அனுசரணையாக இருந்தார்.''

பின்னர், உரையாற்றிய திரு. மார்க்க பந்து, எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

''கலைவாணர் கலையில் சிறந்து விளங்கிய பெருமகனார். எத்தனை மேடைகள் போட்டுப் பிரச்சாரம் செய்தாலும், மக்கள் நெஞ்சங்களில் பதிக்க முடியாத கருத்துக்களைத் திரைப்படத்தின் மூலம் எளிதில் பதிய வைத்தவர் அவர்.''

பின்னர் பேசிய திரைப்பட இயக்குநர் திரு (கிருஷ்ணன்) பஞ்சு குறிப்பிட்டார்.

''கலைவாணரைக் குறித்துச் சொல்வதென்றால் 44 வருட அனுபவங்களைக் குறிப்பிட வேண்டும். ஒவ்வொருவரின் திறமையையும் எப்படி எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்—அவர்களுக்கு எப்படி எப்படி உதவ வேண்டும் என்பதை எல்லாம் நன்கு அறிந்திருந்தவர் கலைவாணர்.''

பின்னர் பேசிய தா. பாண்டியன் குறிப்பிட்டார்.

''நகைச்சுவை நடிகர்களில் பலர் வழுக்கி விழுந்து சிரிக்க வைப்பார்கள். இன்னும் பலர் பல்வேறு சேட்டைகள் செய்வார்கள். நம்மைச் சிரிக்க வைப்பதற்கு அவர்கள் படும் பாட்டைப் பார்த்தால் அவர்கள் மீது நமக்கு அனுதாபம்தான் ஏற்படும். கட்டாயச் சிரிப்பை நம் மீது திணிப்பார்கள். ஆனால் கலைவாணரின் சிரிப்பு அப்படி அல்ல. கலைநயத்தோடு கருத்து விளக்கத்தையும் செய்து நம்மைச் சிரிக்க வைத்தவர் கலைவாணர். அவரைப் பார்த்தவுடனேயே நமக்குச் சிரிப்பு வந்துவிடும்.''

''பல்கலைக் கழகங்கள் கற்றுத் தராத பாடத்தைக் கற்றுத் தந்த பேராசான் அவர்! இந்தச் சமுதாயத்தைச் சொல்லால் அடித்துச் சொரணை வரவழைத்த கலைஞன் கலைவாணன்.''

பின்னர் பேசிய திரு தி. க. பகவதி குறிப்பிட்டார்.

''கலைவாணர் எங்கள் நாடகக் குழுவில்தான் கலைவாழ்க்கையைத் துவக்கினார். அவருக்குத் தெரியாத கலை கிடையாது. நாதசுரம்-தவில்-ஆர்மோனியம்-மிருதங்கம் முதலிய வாத்தியங்களைத் திறம்பட வாசிப்பார். அவரே ஒருமுறை சீன் எழுதினார். எதையும் சீக்கிரத்தில் கற்றுக் கொள்ளும் திறமை அவரிடம் இருந்தது. துணிவுமிக்கவராகவும் அவர் விளங்கினார். பேராற்றல் படைத்த கலைஞர் அவர்.''

பின்னர் பேசிய மேஜர் சுந்தரராஜன் குறிப்பிட்டார்.

''கலைவாணரின் நினைவுநாள் விழா, ஜாதி அடிப்படையில்-அதாவது நடிகர் என்ற முறையில் நாங்கள் எல்லாம் பெருமைப்படும் தினமாகும். கூத்தாடிகள் என்று சொல்லப்பட்டு வந்த நடிகர்களைப் பெருமைக்குரியவர்களாக்குவதற்குப் பாடுபட்ட முதற்கலைஞர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்.''

அடுத்துப் பேசிய திரைப்பட இயக்குநர் திரு ப. நீலகண்டன் குறிப்பிட்டார்.

''கதாநாயகன், கதாநாயகி, வில்லன், காமெடியன் என்று உள்ள பாத்திர வரிசையில் நான்காவது இடம்தான் நகைச்சுவை நடிகருக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. நான்காவது இடத்துக்கு, முதல் மரியாதையை ஏற்படுத்திக் கொடுத்தவர் கலை



வாணர் என். எஸ். கே. அவர்கள் தான்.''

பின்னர், கலைவாணருடன் நீண்ட காலம் பணிபுரிந்த திரு வெ. நாராயணன் உரையாற்றினார், அப்போது அவர் குறிப்பிட்டார்.:

'''கலைவாணரின் விழாவை அரசு நடத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஆனால் ஒரு வேண்டுகோள். கலைவாணரின் நினைவுநாளை வசதி குறித்து வேறு தேதிக்கு மாற்றிக் கொள்ளக் கூடாது. ஆண்டுதோறும் இதே ஆகஸ்ட் 30-ல்தான் நடத்த வேண்டும்.

''மது விலக்கு குறித்து ஒரு முறை வானொலியில் கலைவாணர் ஒரு நிகழ்ச்சி நடத்தினார், அதனை அப்போது டெல்லியில் இருந்த ராஜாஜி, கேட்டுவிட்டு, கல்கிக்குக் கடிதம் எழுதினார், இந்த நிகழ்ச்சியை மக்களுக்கு நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்று.''

பின்னர் திரு அப்துல் வகாப் எம். எல். சி. பேசியபோது குறிப்பிட்டார்.

''மக்களைச் சிரிக்க வைப்பது—நோய் வந்தவர்களுக்கு மருந்து கொடுப்பது போன்ற ஒரு பணி. அந்தப் பணியைத் திறம்படச் செய்த பெரியார் நம் கலைவாணர் உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் நடிகருக்குச் சிலை வைத்திருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அவர் வாழ்ந்த காலத்தில் அவரைவிட அள்ளிக் கொடுத்தவர்கள் எவரும் இருந்திருக்க முடியாது.''

பின்னர் பேசிய திரு எஸ். எஸ் ராஜேந்திரன் குறிப்பிட்டார்:

''கலைவாணரின் நகைச்சுவை சாகா வரம் பெற்றவை. கலைத்துறை மூலமாக நல்ல சேவை செய்ய முடியும் என்று அறிஞர் அண்ணாவை நம்ப வைத்தவர் கலைவாணர் அவர்கள்தான்!

''தற்புகழ்ச்சி என்றால் கலைவாணருக்குச் சிறிதும் பிடிக்காது. தான் சம்பாதித்த பணத்தில் காந்தியடிகளுக்கு ஒரு ஸ்தூபியை நாகர்கோவிலில் கட்டினார்.

''தமிழ் உள்ள அளவும் கலைவாணரின் பெயர் வாழும் என்பதில் ஐயம் இல்லை''

பின்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு எஸ். அரங்கநாயகம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''கலைவாணர் வெறும் நடிகர் என்பதற்காக அல்ல, தமிழ் காக்கப் பிறந்தவர் என்பதற்காக நாம் பாராட்டுகிறோம். ஒருவரைப் பாராட்டுவதற்கு என்னென்ன காரணங்கள் இருக்க வேண்டும் என்று நாம் கருதி வருகிறோமோ அதற்குத் தக்கவராக இருந்தவர் கலைவாணர் என்பதால் நாம் அவரைப் பாராட்டுகிறோம்.

''கலைவாணர் பிறருக்காக வாழ்ந்தார்; நாமும் அவரைப் போல மற்றவர்களுக்காக வாழ மாட்டோமா என்ற ஆசையுடன் தான் இந்த விழாவை நடத்துகிறோம்.

''ஜாதி அமைப்பு-சுரண்டலை அடிப்படையாகக் கொண்டது. அதைத் தகர்த்தெறியவேண்டும் என்று கருதினார். அதற்குக் காரணங்கள் வேதம் என்றாலும் அதை எதிர்க்க வேண்டும் என்று சங்கநாதம் ஒலித்துத் தொண்டாற்றிய பணியாளர் கலைவாணர்.''

பின்னர், விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் உரையாற்றினார்கள். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

'கலைவாணர் இன்று இருந்திருந்தால் அவருக்கு நாம் முத்து விழா நடத்தியிருக்க வேண்டும். ஆனால் 50 ஆண்டுக்குள்ளேயே அவர் மறைந்து விட்டார். 100 ஆண்டு வாழும் கலைஞனுக்கு எவ்வளவு புகழ் சேருமோ அதை விடப் பெரும் புகழை 50 ஆண்டுக்குள்ளேயே நடத்தி முடித்து விட்டார்.

''என். எஸ். கேயை நான் அறிந்தது குறைவுதான். அதுவே மறக்க முடியாதது. என்னையும் அண்ணாவையும் சந்திக்க வைத்தவர் கலைவாணர். இருவேறு துருவங்களாக, அரசியல் நிலைமையால் பிரித்து வைக்கப்பட்ட பிரிவினைக்கிடையே எங்களைப் பிணைக்க வைத்தது அவரது தொண்டு!

பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சிறப்புரை யாற்றினார்; அவரது உரையில் அவர் குறிப்பிட்டார்:

''இன்று தமிழக அரசே கலைவாணர் விழாவை நடத்துகிறது என்றால் அதற்குக் காரணம் கலைவாணர் நடந்து காட்டியதுதான்.

''எனது 17-வது வயதில் எனக்கு அரசியலைச் சொல்லித் தந்தவர் கலைவாணர்.

''நாடகக் கம்பெனியில் சம பந்தி போசனத்தை உருவாக்க அரும்பாடு பட்டவர்.

''மனிதன் ஒரு தத்துவத்துக்கு-கொள்கைக்கு சொந்தக் காரனாக இருக்க வேண்டும்; பிறர் மதிக்கத் தக்க வகையில் அவன் வாழ்ந்தாக வேண்டும். இந்த இரண்டு கொள்கைகளையும் அவர் கற்றுத் தந்தார்.

''ஒரு மனிதன் எப்படி வாழக் கூடாது என்பதை வாழ்ந்து காட்டியிருக்கிறார். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதைச் சொல்லிக் காட்டியிருக்கிறார்.

''ஒரு விஷயத்தை உங்களிடம் இன்று சொல்கிறேன். கலைவாணர் வாழ விரும்பாமல்தான் நம்மையெல்லாம் விட்டுச் சென்றார். கொடுத்த மாத்திரைகளை எல்லாம் சாப்பிடாமல் அவர் தூக்கி எறிந்து விட்டார். அந்த அளவுக்கு அவர் வேதனையில் இருந்தார்.

''புகழும் பணமும் நிரந்தரம் என்று சிலர் நடக்கிறார்கள். அந்தக் காலத்தில் கலைவாணர் செய்ததுபோல் தர்மம் யாரும் செய்யவில்லை.

''கலைவாணர் ஒரு சகாப்தம். ஆனால் அது முடிந்து விட்ட சகாப்தம்.

''இன்று அவர் இருந்திருந்தால் எனக்கு இந்தக் கஷ்டமில்லை. அவர்தான் முதலமைச்சராக இருந்திருப்பார். அவருக்கு நான் உதவியாக இருந்திருப்பேன்.

''தமிழ்ப் பண்புக்கும், தமிழ்க் கலாச்சாரத்துக்கும் தமிழர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கும் இலக்கணமாக இருந்தவருக்கு மரியாதை காட்டவே இந்த விழா நடத்தப்படுகிறது.''

தமது உரைக்குப் பின்னர், கலைவாணருடன் நீண்ட காலமாகப் பணிபுரிந்தவரும், அவரது நினைவு நாள் விழாவினைப் பல்லாண்டுகளாக நடத்தி வருபவருமான திருவே. நாராயணன் அவர்களுக்கு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் முதல்வர் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்.

பின்னர், விழா இனிது நிறைவெய்தியது.

—நிகழ்ச்சித் தொகுப்பு:

**தமிழ்ப்பித்தன்.**

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும்!

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும்!

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.
(தொலைபேசி எண். 20367)
*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.*

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.




# எண்ணெய் வித்துக்கள் பரிசோதனை நிலையம் திண்டிவனம்

**எஸ். மாதவராவ்**, பி.எஸ்.சி.,(விவ)
பயிர் சிறப்பறிஞர்,
எண்ணெய் வித்துப் பரிசோதனை நிலையம்,
திண்டிவனம்.

திண்டிவனம் எண்ணெய்வித்துப் பரிசோதனை நிலையம், தமிழ்நாட்டில் உள்ள நிலையங்களில் பழமையானதொன்றாகும். 1935-ஆம் ஆண்டு சிறிய அளவில் நிறுவப்பட்ட இப் பண்ணை 1962—ஆம் ஆண்டில் வட்டாரப் பண்ணையாக விரிவாக்கப்பட்டது.

இந்நிலையம் திண்டிவனம் பாண்டிச்சேரி சாலையில், திண்டிவனத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சுமார் 60 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நிலையத்தில் பயிரின வளர்ச்சியியல், உழவியல், மண்வளம், பூச்சியியல் மற்றும் பூஞ்சாள இயல் வல்லுநர்கள் ஒருங்கிணைந்து பயிர் நுண்ணறிஞர் தலைமையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையத்தின் மண் அமைப்பு மணிலா சாகுபடிக்கு ஏற்ற செம்மண் பூமியாகும். தென்மேற்குப் பருவக்காற்றாலும், வடகிழக்குப் பருவக்காற்றாலும் இப்பகுதியில் சராசரியாக 1116 மி.மீ. மழை கிடைக்கிறது. இதில் 40 சதவிகிதம் தென்மேற்குப் பருவக்காற்றாலும். 50 சதவிகிதம் வடகிழக்குப் பருவக்காற்றாலும், மீதமுள்ள மழை கோடையிலும் கிடைக்கிறது.

**பயிரின் வளர்ச்சியியல் :**

**நிலக்கடலை:** நிலக்கடலை ஆராய்ச்சிக்கு அடிப்படையென்று கருதி அதன் பல குண வேறுபாடுகளையறியும்பொருட்டு சுமார் 850 ரகங்கள் பல நாடுகளிலிருந்தும் கொண்டுவரப்பட்டுப் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சியின் பல வழிமுறைகள் மூலம் இது நாள் வரை 12 ரகங்கள் நமது மாநிலத்தின் வெவ்வேறு தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப அதிக மகசூல் கொடுக்கக்கூடிய ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவைகளில் விவசாயிகளிடம் மிகவும் பரவலாகப் பயிரிடப்பட்டு வருபவை குறைந்த வயதில் (105 நாள்) டி.எம்.வி. 7ம், 9ம் நீண்டகால வகையில் (125 நாள்); டி.எம்.வி. 10-ம் ஆகும். அண்மையில் வெளியிடப்பட்ட குறைந்த வயது ரகம், டி.எம்.வி. 11 மற்றும் டி.எம்.வி. 12-ம் ஆகும். டி.எம்.வி. 10 ரகம் அகில இந்தியாவிலும் வெகுவாக விவசாயிகளிடம் பரவிவருகின்றது.

இன வளர்ச்சியியலில் நிலக்கடலையில் தனிவழித் தேர்வுமுறை தவிர இனச்சேர்க்கை மூலம் முற்றிலும் புதிய மாற்றமுள்ள பல இலட்சக்கணக்கான தினுசுகள் இப்பொழுது ஆராயப்பட்டு வருகின்றன.

இதன் பலனாக, 75 நாள் வயது கொண்ட மணிலா ரகங்கள் பல தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசோதனையில் உள்ளன. இவை விரைவில் விவசாயிகளுக்குக் கிடைக்க விதை உற்பத்தித் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ரகங்கள் எதிர்காலத்தில் தீவிர பயிர்ச் சாகுபடித் திட்டங்களுக்கு மிகவும் பயன்படும்.



நிலக்கடலையின் மூதாதையர் என்று சொல்லப்படும் சில வகைகள் குறிப்பாக அராக்கிஸ் மாண்டிக்கோலா என்ற வகையுடன் இனச்சேர்க்கையால் விளைந்த தினுசுகளில் காயின் அமைப்பு சிறியதாகயிருந்தாலும் ஒவ்வொரு செடியில் கிடைக்கும் காயின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேற்கொண்டு தொடரப்பட்ட ஆராய்ச்சியினால் அதிக எண்ணிக்கையுடன் பெரிதான காய்கள் கிடைக்க வழியுண்டு எனவும் தெரிகிறது. இந்த முயற்சி, ஆராய்ச்சியில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையத்தின் சிறப்பினைக் கூறுமிடத்து இங்குச் செயல்படுத்தப்படும் இனச்சேர்க்கை வழிமுறைகளில் முதல் இரண்டாம் தலைமுறையில் தேர்ந்தெடுத்த சந்ததிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நான்கிற்கும் மேற்பட்ட பெற்றோர் குணங்களை ஒன்று சேர்த்து புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதைக் குறிப்பிடலாம். 1974ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தினால் குறைந்த வயதுடன் அதிக மகசூல் பருமனான பருப்புகள் அதிக எண்ணெய்ச்சத்து கொண்ட பல தினுசுகள் மகசூல் பரிசோதனையில் உள்ளது.

இம்முறை மேலும் தீவிரப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம்

மகசூல் பரிசோதனையில் 30 ரகங்களும், ஆரம்பப் பரிசோதனையில் சுமார் 1,000 ஒட்டு ரகங்களும் உள்ளன. ஆராய்ச்சியின் பல திட்டங்களில் வறட்சியைத் தாங்கவல்ல ரகங்கள், மற்றும் பெரும் பருப்பு கொண்ட ரகங்கள் இனச்சேர்க்கை வழிமுறையினால் உருவாக்கப்பட்டுச் சுமார் 100 வகைகள் மகசூல் பரிசோதனையில் உள்ளன. முதல் இரண்டாவது தலைமுறை, மற்றும் பல பெற்றோர்களை மேற்கூறிய தலைமுறைகளில் ஒருங்கிணைந்ததால் விளைந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட சந்ததிகள் ஆராய்ச்சியில் இருந்து வருகின்றன.

இந்நிலையத்திலிருந்து 5 எள் ரகங்கள் இதுவரை வெளியிட்டுள்ளது. எல்லா மாவட்டங்களிலும் எல்லாப் பருவங்களிலும் திண்டிவனம் 3-ம், கோடை சாகுபடிக்குத் திண்டிவனம் 4-ம், மற்றும் தென் மாவட்டங்களுக்கு மானாவாரி சாகுபடிக்குச் சிறந்த எள் இவ்வாண்டு வெளியிடப்பட்ட திண்டிவனம் 5-ம் ஆகும். இவைகளில் திண்டிவனம்-3 ரகம் இனச்சேர்க்கையால் விளைந்ததாகும் என ஆராய்ச்சிக்கு அடிப்படையென சுமார் 380 எள் ரகங்கள் பயிர்செய்யப்பட்டு வருகின்றது. எள் ஆராய்ச்சியில் கோடைசாகுபடிக்கு அதிகக் கிளைகள் கொண்ட ரகங்களும் மானாவாரி மற்றும் குளிர்காலச் சாகுபடிக்கு மிதமான கிளை அமைப்புகளும் சிறந்தது எனத் தெரியவந்தது. இந்த எண்ணத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள புதிதாக இனச்சேர்க்கையினால் கண்டுபிடிக்கப்பெற்ற கிளைகள் இல்லாத நிறைந்த கணுக்களுடன் கணுக்களில் அதிகக் காய்கள் (2-3) மற்றும் காய்களின் அறைகள் 4-க்கு மேற்பட்டு அமையப் பெற்ற ரகங்களாகும். இவ்வகையில் செடிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதனால் அதிக மகசூல் கிடைக்கிறது.

எள் ஆராய்ச்சியிலும் மணிலாவில் போலவே முதல் இரண்டாம் தலைமுறை சந்ததிகளில் இனச்சேர்க்கையினால் நான்கிற்கும் மேற்பட்ட பெற்றோர்களின் குணங்களை ஒருங்கிணைந்து புதிய ரகங்கள் உருவாக்கப்பெற்று வருகின்றது. தற்சமயம் மகசூல் பரிசோதனையில் 300 ரகங்களும், ஆரம்பப் பரிசோதனையில் 1,000 வகைகளும் உள்ளன. இனச் சேர்க்கையால் விளைந்த சந்ததிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

ஆமணக்கில் இந்நிலையத்திலிருந்து 3 நீண்டகால ரகங்கள் (6 மாதம்) வெளியிடப்பட்டுள்ளன. திண்டிவனம் 2 ரகம் ஊடுபயிராக மஞ்சள் மிளகாய்ச் சாகுபடி செய்யும் நிலங்களுக்கு ஏற்றது. கரும்பு, வெற்றிலைத் தோட்டங்களில் வரப்பு ஓரங்களில் நட திண்டிவனம் 3 சிறந்தது. பல பயிர்த் திட்டங்களில் ஆமணக்கில் நீண்ட கால வயதால் ஏற்படும் பிரச்சினையைத் தவிர்க்கவும், மேலும் இது ஒரு இலாபகரமான பயிர் என்று சொல்ல மகசூல் அதிகரிக்க வேண்டிய சூழ்நிலையிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு சேலம்-2 என்ற குறுகியகால (120 நாள்) வகையைவிட 105 நாளில் அறுவடைக்கு வரும் ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அனுசரணை ஆராய்ச்சியில் வரும் பருவங்களில் இது பரிசோதிக்கப்படும். இது தவிர 70 நாளில் அறுவடைக்கு வரும், ஊடுபயிருக்கு ஏற்ற வகை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றது. மேலும், குறுகியகால ஒட்டு ரகம் வெளியிடவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சூரியகாந்தி :**

சூரியகாந்தியில் முக்கிய ஆராய்ச்சிகள் கோவில்பட்டி நிலையத்தில் கரிசல் மண்வளத்துக்கு ஏற்ற சூழ்நிலையில் செய்யப்பட்டு வருகின்றன. திண்டிவனத்தில் அங்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ரகங்கள் மகசூல் பரிசோதனை செய்யப்படுகிறது. இது தவிர மகசூல் அளிக்க வல்ல ரகங்களை உருவாக்க இனச்சேர்க்கை மூலம் ஆராய்ச்சிகள் இங்கு நடைபெற்று வருகின்றன.

**சோயாபீன் :**

நம் மாநிலத்திற்குப் புதிய பயிர்வகையான சோயா பயிரின் பல வகைகள் இங்கு மகசூல் பரிசோதனை செய்யப்படுகிறது.

**உளுந்து :**

உளுந்தில் இனச்சேர்க்கை மூலம் புதிய ரகங்கள் உருவாக்கப்பட்டுத் தற்போது 3 தினுசுகள் விவசாயிகள் நிலங்களில் அனுசரணை ஆராய்ச்சியில் இருக்கிறது. மேலும், உயர் விளைச்சல் தரும் ரகம் கண்டுபிடிக்க ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**மக்காச்சோளம் :**

அதிக மகசூல் கொடுக்கக்கூடிய முக்கிய புரதச்சத்துப் பொருள்களான லைசின், ட்ரைடோபேஃன் மிகுதியாக உள்ள ரகங்களை உருவாக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் பயனாக விளைந்த மக்காசோளத்




மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கதிர்நரசிங்கபுரம் உழவர் ஆய்வு மன்றம், தமிழ்நாட்டிலேயே சிறந்த உழவர் ஆய்வு மன்றமாகத் (1977—78) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுழற்கேடயமும், ரொக்கப் பரிசு 300 ரூபாயும் வழங்கப்பட்டது.

திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தில் நடந்த பண்ணை இல்ல ஒலிபரப்பின் 12-வது ஆண்டு விழாவில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ப.குழந்தைவேலு அவர்கள் முன்னிலையில் இப்பரிசு வழங்கப்பட்டது.



தினுசுகள் வரும் பருவங்களில் விவசாயிகளின் நிலங்களில் அனுசரணை ஆராய்ச்சியில் மகசூல் பரிசோதனை செய்யப்படும்.

**அகில இந்திய ஒருங்கிணைந்த திட்டங்களுடன் இந்நிலையத்தின் பங்கு**

இந்நிலையம், மற்ற மாநிலங்களில் உள்ள நிலையங்களுடன் தொடர்பு கொண்டு வேளாண் நுண்ணறிஞர்களால் ஏற்பட்டிருக்கும் குழுக்களால் அகில இந்திய ரீதியில் பரிசோதிக்க முடிவு செய்யப்படும்.

சோளம், கம்பு, ஆமணக்கு, எள் போன்ற பயிர்களில் உள்ள ரகங்கள் அனுப்பப்பட்டு இங்குப் பரிசோதனை செய்து முடிவுகளை அளிக்கின்றது. இதனால் நமது நாட்டில் பல இடங்களில் நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின் திட்டங்களை இங்குள்ளவர்கள் வல்லுநர்கள் அறிந்து கொண்டு புதிய செயல் திட்டங்களை உருவாக்க ஏதுவாக இருக்கிறது.

**நிலக்கடலை :**

நிலக்கடலைக்குத் தேவையான உழவியல் முறைகளில் இடைவெளி, களையைக் கட்டுப்படுத்துதல், தேவையான அடியுரம் மற்றும் மேலுரத்திற்கு மண்வளத்துறையுடன் ஒருங்கிணைந்து பரிசோதனையிட்டு முடிவு கூறப்படுகிறது.

| | மானாவாரி | இறவை |
|---|---|---|
| | (செ.மீ.) | (செ.மீ.) |
| இடைவெளி | | |
| கொத்து ரகம் | 30X10 | 30X15 |
| கொடி ரகம் | 30X15 | 30X20 |

விதைகள் தேர்ந்தெடுப்பதில் சிறிய அல்லது பெரிய பருப்புகள் ஒரே ரகத்தில் இருந்தாலும் முளைப்புத்திறன் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், முற்றாத சுருக்கம் விழுந்த பயிர்கள் முளைப்புத்திறனைப் பாதிக்கிறது.

களையைக் கட்டுப்படுத்த விதைத்தபின் 24 மணி நேரத்திற்குள் ஏக்கருக்கு லாசோ 1.6 லிட்டர் அல்லது டோக்-இ 25, 3 லிட்டர் அல்லது ஹெக்சாமர் நைட்ரோஃபன் 3 லிட்டர் மருந்தை 40 கிலோ மணலில் கலந்து சீராகத் தூவுவதால் இரு இலை களைகளை முழுவதும், ஒரு இலை களைகளைச் சுமார் 40 சதமும் கட்டுப்படுத்த முடிகிறது. இதனால் முதல் களையெடுப்பைத் தவிர்க்கலாம்.

அடியுரமாக ஊட்டம் ஏற்றிய தொழு உரம் இடுவதால் முழு உர சிபாரிசினால் கிடைக்கும் மகசூல் கிடைப்பதுடன் தொழு உரத்தின் தேவை 7 பங்கு குறைகிறது. அடியுரமாக 5 கிலோ நுண்ணூட்டச்சத்து கலவை சிபாரிசு செய்யப்படுகிறது.

மேல் உரமாக 45-ஆம் நாள், ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இரண்டாம் களையெடுப்பின் போது இட்டு, மண் அணைப்பதால் நல்ல திரட்சியான பருப்புகள் கிடைப்பதுடன் மகசூலும் 15-லிருந்து 20 சதம் அதிகமாகக் கிடைக்கிறது.



**எள் :**

அடியுரமாக சிபாரிசு செய்யப்படும் உரம் தவிர ஏக்கருக்கு 2 கிலோ மங்கனிஸ் சல்பேட் அடியுரமாக இடுவதால் 15 சதம் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

மானாவாரி எள்ளிற்கு இடைவெளி 30X20 செ. மீ. இறவை எள்ளிற்கு இடைவெளி 30X30 செ. மீ. சிபாரிசு செய்யப்படுகிறது. விதையுடன் மணல் கலந்து வரிசையில் மேலும் விதைப்பதால் விதைகள் 2 செ. மீ. ஆழத்தில் சீராக விதைக்கப்படுகின்றன. மேலும் செடிகளை 15ஆம் நாளும் 25 ஆம் நாளும் களைந்து எடுப்பதால் எல்லாச் செடிகளும் தகுந்த இடைவெளியுடன் வளர்ந்து நல்ல பலன் அளிக்கிறது.

**ஆமணக்கு :**

குறைந்த வயது சேலம் 2 மற்றும் அருணா ஆமணக்கு ரகங்களுக்கு 45X30 செ. மீ. இடைவெளியுடன் செடி நுனியில் அமைந்திருக்கும் பூவும் இரண்டு பக்கக் கிளைகளும் தவிர மற்றவைகளைக் கிள்ளி எடுத்துவிடுவதால் அதிக மகசூலும், செடிகளின் நீண்ட வயதான 130 நாட்களிலிருந்து 105 நாட்களுக்குக் குறைக்கலாம்.

**பூச்சியியல் :**

பூச்சியியல் பிரிவில் எண்ணெய்வித்துக்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி அவைகளின் சேதத்தைத் தவிர்க்கும் வழிமுறைகள் பற்றி ஆராய்ச்சிகள் பல நடந்து வருகின்றன. நிலக்கடலையைத் தாக்கும், காய் துளைப்பான், சுருள் பூச்சி, சிவப்புக் கம்பளிப் புழு மற்றும் அசுவணி, எள்ளைத் தாக்கும் காய்த்துளைப்பான், அசுவணி, சூரியகாந்தியைத் தாக்கும் பகையினை வெட்டுப்புழு போன்ற பூச்சிகள் முக்கியமானவையாகும்.

இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி, அவைகளின் சேதத்தைத் தடுத்து நல்ல மகசூல் பெற, திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்துள்ள பூச்சியியல் பிரிவில் நடத்தப்பட்ட விரிவான ஆய்வுகளின் பயனாகத் தெரியவந்துள்ள கண்டுபிடிப்புகளைப் பற்றி சுருக்கமாக இங்குத் தரப்படுகிறது.

**நிலக்கடலையைத் தாக்கும் காய்த்துளைப்பான் :**

கரிய நிறம் கொண்ட இந்தப் பூச்சிகள் மண்ணிலேயே வாழும் தன்மை வாய்ந்தவை. இதன் உடலின் பின் பக்க வடிவில் இடுக்கி போன்ற உறுப்பைக் காணலாம். இந்தப் பூச்சிகள் நிலக்கடலையைக் காய்பிடிக்கும் பருவத்தில் தாக்கி சேதம் விளைவிக்கின்றது. இந்தப் பூச்சிகள் காய்களில் பருப்புகள் தோன்றும் நிலையில் அவற்றைத் துளைத்து உள்ளிருக்கும் பருப்புகளைத் தின்றுவிடும். அதோடு மட்டும் இல்லாமல் அவை ஏற்படுத்திய துளைகளின் மூலம் பூஞ்சாளங்கள் பரவி காய்களையே மக்கச் செய்துவிடும். தாக்கப்பட்ட நிலக்கடலையைப் பிரித்துப் பார்த்தால் கறுப்பு நிறம் கொண்ட மக்கிய பொருள்களை மட்டுமே காண முடியும். இப்பூச்சிகள், புதிதாக வெளியிடப்பட்டுள்ள டி. எம். வி. 10 ரக நிலக்கடலையை அதிக அளவில் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. இவற்றைக் கீழ்க்

கண்ட பூச்சிக்கொல்லிகளை முதல் தடவையாக விதைப்பதற்கு முன்பும், இரண்டாவது முறையாக இரண்டாவது களை எடுப்பின்போது இடுவதின் மூலம் கட்டுப்படுத்தலாம். எக்டேருக்கு டி. டி. டி. ஐந்து சதத்தூள் 40 கிலோ அல்லது மேலத்தியான் 5 சதத்தூள் 40 கிலோ அல்லது டிரைக்குளோர்ப்பான் 5 சதத்தூள் 40 கிலோ அல்லது டைசல் போட்டான் 5 சதக் குருணை மருந்து எக்டேருக்கு 30 கிலோ என்ற அளவில் ஏதாவது ஒரு மருந்தைப் பயன்படுத்தி இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

**நிலக்கடலையில் சுருள் பூச்சி :**

நிலக்கடலைப் பயிரின் முன் பருவத்தில் விதைத்து 20 முதல் 75 நாட்கள் வரையில் சுருள் பூச்சியின் தாக்குதலை எல்லா ரக மணிலாவிலும் காணலாம். இருப்பினும் மானாவாரி மணிலாவில்தான் இப்பூச்சியின் தாக்குதல் அதிக அளவில் காணப்படுகின்றன. இறவையில் பயிராகும் மணிலாவில் இதன் தாக்குதல் அதிக அளவில் காணப்படுவதில்லை. இந்த சுருள் பூச்சியின் தாக்குதலால் மணிலாவில் சுமார் 15 முதல் 35 சதம் சேதம் விளைகின்றது.

கருந்தலையுடைய சாம்பல் நிறப் புழுக்கள் இலைகளை ஒன்றோடு ஒன்று இணைத்து, சுருட்டி உள்ளிருந்து கொண்டே இலையில் உள்ள பச்சையத்தைச் சுரண்டி தின்பதினால் இலைகள் காய்ந்து சருகாய் விடுகின்றன. இதனால் செடியின் வீரியம் குறைந்து நல்ல மகசூல் பெற இயலாமல் போய்விடுகின்றது.

என்டோசல்ஃபான் 4 சதம் தூள் எக்டேருக்கு 25 கிலோ அல்லது டி. டி. டி. 5 சதம் தூள் 25 கிலோ அல்லது கார்பரைல் 10 சதம் தூள் 25 கிலோ அல்லது என்டோசல்பான் மருந்து திரவத்தை 750 மில்லி அல்லது தூவான் 750 மில்லி என்ற அளவில் ஏதாவது ஒரு மருந்தை விதைத்த 20, 40, 60 நாட்களில் தெளித்தல் (அல்லது) தூவுதல் மூலம் நிலக்கடலையில் சுருள் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

**நிலக்கடலை சிவப்புக் கம்பளிபூச்சி :**

இந்தச் சிவப்புநிறக் கம்பளிப் புழுக்கள் மானாவாரி மணிலாவில் பெருவாரியாகத் தோன்றி நிலக்கடலைப் பயிர்களை அடியுடன் அழித்துவிடுகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள செஞ்சி, வல்லம், மேல்மலையனூர், வட்டாரங்களில் ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்குப் பருவக்காற்றில் பெய்யும் முதல் மழையின்போது இப்பூச்சிகள் பெருவாரியான அளவில் தோன்றி மானாவாரி மணிலா அனைத்தையும் அழித்துவிடுகின்றன. மற்ற இடங்களில் சிறிது குறைந்த அளவில் தோன்றினாலும், அதிக அளவில் சேதத்தை விளைவிக்கின்றன. மழை பெய்த இரண்டாம் நாளில் மாலை பூமியின் உள்ளிருக்கும் கூட்டுப் புழுக்களில் இருந்து வெளிப்படும் ஈ, வெள்ளை நிற பட்டாம்பூச்சிகள் இனச்சேர்க்கைக்குப் பின் இலைகளின் அடிப்புறத்தில் குவியல், குவியலாக முட்டை இடும். சாம்பல் நிற ரோமத்தில் இருக்கும் இளம் புழுக்கள் முதல் பருவத்திலிருந்து மூன்றும் பருவம் அடையும் வரை கூட்டமாக இருந்து கொண்டு இலைகளைச் சுரண்டித்தின்றும், பின்பு அதன் ரோமங்கள் நீண்டு சிவப்பு நிறமுள்ள நான்காவது பருவம் அடைந்தவுடன் இப்புழுக்கள் வீரியம் அடைந்து, தனித்தனியாகப் பிரிந்து, பூமிக்கு மேல் உள்ள செடியின் எல்லாப் பாகங்களையும் உண்பதன் மூலம் செடியை அடியுடன் அழித்துவிடும்.



இந்தச் சிவப்பு நிறக் கம்பளிப்புழுவைக் கட்டுப்படுத்த, பி.எச்.சி. 10 சதம் தூள் 25 கிலோ அல்லது திரவ மருந்துகளான என்டோசல்ஃபான் 750 மில்லி அல்லது குவினல்ஃபாஸ் 750 மில்லி அல்லது பாக்சோர்பின் 2.5 லிட்டர் என்ற அளவில் ஏதாவது ஒன்றை இளம்புழுக்கள் தோன்றியவுடன் தூவியோ அல்லது தெளித்தோ இவற்றை எளிதில் அறவே ஒழித்துவிடலாம். வளர்ந்த புழுக்களில் நீண்ட அடர்த்தியான உரோமங்கள் இருப்பதால் இவற்றைக் கட்டுப்படுத்துவது சிறிது கடினமே.

மழை பெய்த மறுநாள் வெளிப்படும் பட்டாம்பூச்சிகளை விளக்குப் பொறிகளை உபயோகித்து கவர்ந்து அழிப்பது மிகவும் எளிது. இப்படி ஒழித்தால் பட்டாம்பூச்சியை அழிப்பது இரண்டாயிரம் கம்பளிப்புழுக்களை ஒழிப்பதற்குச் சமம்.

நன்கு வளர்ந்த புழுக்கள் வயல்விட்டு வயல் நகராமல் இருக்க, தாக்கப்படாத வயலைச் சுற்றி 1 அடி ஆழமும், 6 அங்குல அகலமும், உள்ள குழிகளை வெட்டித் தடுக்கலாம். குழிகளில் சேரும் புழுக்களின் மேல் மண்ணெண்ணெய்யை தெளித்து அழித்துவிடலாம்.

**அசுவிணி :**

கறுப்பு அல்லது பச்சை நிறமுள்ள அசுவிணிகள் கூட்டம் கூட்டமாக இலைகளின் அடியிலும் முளைக்குருத்துகளிலிருந்து கொண்டு சாற்றினை உறிஞ்சி விடுவதால் செடிகள் சுருண்டு சுருங்கி வாடிவிடும். அதிக அளவில் தாக்கப்பட்ட இளம் செடிகள் பட்டுவிடுகின்றன. இறக்கைகள் உள்ள அசுவிணிகள் பறந்து சென்றும், இறக்கையற்றவைகள் காற்றில் அடிக்கப்பட்டும் மற்ற செடிகளுக்குப் பரவுகின்றன. நன்கு வளர்ந்த அசுவிணிகள் கருநிறமாக இருக்கும். இந்த அசுவிணிகள் எல்லாப் பருவங்களிலும் அனைத்து ரகமான நிலக்கடலையிலும் தோன்றி கணிசமான சேதம் விளைவிக்கின்றன.

இப்பூச்சிகளைத் திரவ மருந்துகளான டைமெதோவேட் எக்டேருக்கு 750 மில்லி அல்லது மெதில் செடுமெடான் 750 மில்லி ஏதாவது ஒரு மருந்தை உபயோகித்துக் கட்டுப்படுத்தலாம்.

**என் கொண்டைப்புழு :**

கரிய தலையுடைய வெள்ளை நிறப்புழுக்கள் இளம் எள் செடியில் நுனி இலைகளை ஒன்றோடொன்று இணைத்து உள்ளிருந்துகொண்டே குவித்து இளம் இலைகளைச் சுரண்டி உண்ணுகின்றன. செடிகள் பூக்கும் பருவத்தில் பூக்களைக் குடைந்து அண்டகாசத்தைத் தின்பதனால் காய்கள் காய்ப்பதில்லை. காய் பிடித்த பக்குவத்தில் இப்புழுக்கள் காய்களைக் குடைந்து உள்ளிருக்கும் விதைகளை உண்பதால் விதைகள் நாசமடைகின்றன. குளிர் காலத்தில் பயிரிடப்படும் எளிதில் இந்தக் கொண்டைப் பூச்சியின் தாக்குதல் அதிகமாகக் காணப்படுகின்றது.

இப்பூச்சியை, எண்டோசல்ஃபான் 4 சதத்தூள் எக்டேருக்கு 25 கிலோ அல்லது கவினல்ஃபாஸ் 1.5 சதம் தூள் 25 கிலோ அல்லது மாலதியான் அல்லது டி.டி.டி. 5 சதத்தூள் 25 கிலோ அல்லது திரவ மருந்து

என்டோசல்பான் எக்டேருக்கு 750 மில்லி அளவில் ஏதாவது ஒரு மருந்தைக் கொண்டு தூவியோ தெளித்தோ நல்ல முறையில் கட்டுப்படுத்தலாம்.

**சூரியகாந்தியில் தோன்றும் பூச்சிகள் :**

**பூச்சைத் தத்துப்பூச்சிகள், கூன்வண்டுகள் :**

இவை இலைகளைத் தாக்கிச் சாற்றை உறிஞ்சியும், அவற்றைத் துளைத்தும் சேதப் படுத்துகின்றன. இவற்றால் பயிர் மகசூல் பாதிக்கப்படுகிறது. இவற்றை பி.எச்.சி. 10 சதம் தூளுடன் டி. டி. டி. 5 சதத்தூளை 25 கிலோ அளவில் கலந்து தூவி கட்டுப்படுத்த லாம்.

இளம் குருத்துகளும் பூங்கொத்துகளும் காய்ப்புழுக்களால் துளைக்கப்பட்டு சேதமாக் கப்படுகின்றன.

இவற்றை எக்டேருக்கு எண்டோசல்ஃபான் திரவமருந்து 1,000 மில்லியையோ டாக்ஸோ பீன் என்ற மருந்தை 1,000 மில்லியையோ தண்ணீரில் கலந்து மொட்டுகள், பூக்கள் வெளிவரும்போது தெளித்துக் கட்டுப்படுத்தலாம்-சூரியகாந்திப் பூக்களில் பகல் நேரங்களில் தேனீக்கள் நிறைய வந்து போவதால் மாலை நேரங்களில் மருந்து தெளிப்பது சாலச் சிறந்ததாகும்.

**பூஞ்சாளயியல் :**

மணிலாவைத் தாக்கும் தூர் அழுகல், வேர் அழுகல், துருநோய் மற்றும் டிக்கா ஆகிய நோய்களைப் பற்றியும், எள்ளைத் தாக்கும் சாம்பல் நோய், ஆல்டெர் நேரியா மற்றும் பீலை நோயைப் பற்றியும் விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தழைச்சத்து சேர்க்கும் நுண்ணுயிர்களான வரசோபியம் மற்றும் அசட்டோ பேக்டர் பற்றியும் ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மேற்கண்ட நோய்களைப் பற்றிய ஆராய்ச்சி கீழ்க்கண்ட மூன்று குறிக்கோள்களின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

(1) விதைகளும் காலத்திற்கு ஏற்றவாறு நோயின் வீரியத்தன்மை எவ்வாறு மாறுபடுகிறது.

(2) இனச்சேர்க்கை செய்யப்படும் புதிய இனங்களுக்குண்டான நோய் தாங்கும் சக்தி.

(3) பூஞ்சானக் கொல்லி மருந்துகளால் நோய்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது? பொதுவாக எண்ணெய்வித்துச் சாகுபடியாளர்களின் தேவைகளும் நடைமுறை சாத்தியக் கூறுகளும் நினைவில் கொள்ளப்படுகின்றன.

இந்நிலையத்தின் நோய்ப் பிரிவில் விவசாயிகளுக்கு உபயோகமான சில முக்கிய கண்டுபிடிப்புகள் இங்குச் சுருக்கமாகத் தரப் படுகின்றன.

**நிலக்கடலை :**

**வேர் அழுகல் நோய் மற்றும் தூர் அழுகல் நோய் :**

நம் நாட்டில் நிலக்கடலையின் சராசரி மகசூல் குறைவாக இருப்பதற்கு உரிய செடி நெருக்கம் இல்லாதது மிக முக்கிய காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறைந்த செடி நெருக்கத்திற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும் அந்த வேர் அழுகல் மற்றும் தூர் அழுகல் என்னும் பூஞ்சான நோய்கள் மிக முக்கியமான காரணமாகும். ஏனெனில், இந்நோய்கள் விதைகள் மூலமும் மண்ணின் மூலமும் பரவுவதால் இவை விதை முளைக்கும் பருவத்திலேயே தாக்கி விதைகளை முளைக்காமலேயே செய்து விடுகின்றன. விதைகள் முளைத்தபின் இப்பூஞ்சானங்கள் வேர் பாகத்தையும், தூர் பாகத்தையும் தாக்கிச் செடியை வாடிவிடச் செய்யும். இவ்விரு நோய்களும் மானாவாரிப் பயிரிலும், இறவைப்பயிரிலும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் இப்பொழுது பயிரிடப்படும் எல்லா ரகங்களும் இந்நோய்களுக்கு இலக்காகக் கூடியவையே.

இந்நோய்கள் வந்தபின் கட்டுப்படுத்துவது மிகக் கடினம். இந்நோய்களைக் கட்டுப்படுத்த எளிய, சிக்கனமான முறை விதை நேர்த்தி




நீலகிரி மாவட்டம் கூடலூர் என்ற இடத்தில், கூட்டுறவு முறையில் 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிர் செய்து ஐந்து தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காகப் பத்துகோடி ரூபாய் ஒதுக்கப்படவிருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளில் 5,000 நிலம் இல்லாத ஏழைகள் மற்றும் இலங்கை அகதிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள். முதலில் இவர்களைக் கூலியாட்களாகச் சேர்த்து, பின்பு தேயிலைப் பயிர் வளர்ந்ததும் அவரவர் பறிக்கும் தேயிலையின் அளவிற்கு ஏற்ப அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படும். முதற் கட்டமாக ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள்.

செய்வதேயாகும். விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் திராம் என்னும் மருந்தைக் கலந்து விதைக்க வேண்டும். விதை நேர்த்திசெய்ய .பாலித்தீன் பைகளை உபயோகித்தல் நலம். இம்மருந்து,வேர் அழுகல் மற்றும் தூர் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்துவதால் மருந்து கலக்காத விதையினை விட 10 சதம் முளைப்புத்திறனை அதிகரிக்க வல்லது. பயிர் வளர்ந்தபின்னும் இந்நோய்கள் மிக அதிக அளவில் கட்டுப்படுத்தப்பட்டு மகசூல் அதிகரிக்கிறது.

**டிக்கா நோய் :**

டிக்கா என்னும் இலை நைவுப்புண் நோய், பயிர் 35 முதல் 45 நாள் வயதடையும்போது தோன்றி அதிகரித்துக்கொண்டே செல்லும். பல நைவுப்புண்கள் ஒன்று சேர்வதால் ,இலை கருகி உதிர்ந்துவிடும். இந்நோய் தண்டு மற்றும் கடலைக்காம்பு ஆகிய பகுதிகளையும் தாக்கவல்லது. நைவுப்புண்ணிலுள்ள பூஞ்சான வித்துக்கள், காற்றின் மூலமும் தண்ணீரின் மூலமும் எடுத்துச் செல்லப்பட்டு, நோய் மேலும் மேலும் பரவுகிறது. இந்நோயினால் 20 முதல் 30 சதம் வரை மகசூல் பாதிக்கப்படுகிறது. அடர்கொடி ரகமான டி.எம்.வி. 10-க்கு இந்நோயை ஓரளவு தாங்கும் சக்தியுண்டு.

**நோய் தவிர்த்தல் :**

ஜூன் மாதம் ஆரம்பிக்கும் பருவ மழைப் பருவத்தில் பருவமழை ஆரம்பித்த முதல் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்தால் டிக்கா நோயின் தாக்குதல் குறைவாகவுள்ளது. அதற்குப் பிறகு காலம் கடந்து விதைத்தால் டிக்காநோய் அதிகமாகத் தாக்குகிறது. எனவே, தென்மேற்குப் பருவமழைக்காலத்தில் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்தால் டிக்காநோயின் தாக்குதல் குறைவாகவுள்ளது. அதற்குப் பிறகு காலம் கடந்து விதைத்தால் டிக்கா நோய் அதிகமாகத் தாக்குகிறது. எனவே, தென்மேற்குப் பருவமழைக்காலத்தில் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்து டிக்காநோயைப் பெருமளவு தவிர்த்து மகசூலை அதிகரிக்கலாம்.

**துருநோய் :**

இந்நோய் தமிழ்நாட்டில் சமீப காலத்தில் தோன்றி நிலக்கடலைக்கு அதிக சேதத்தை விளைவித்துள்ளது, இலையின் அடிப்பாகத்தில் பழுப்பு நிறத்தில் சிறுசிறு கொப்புளங்களைப் போன்று தடித்திருக்கும். அதைத் தொட்டுப் பார்த்தால் பூஞ்சானவித்துக்கள் அதாவது கையில் இரும்புத் துருபோல் ஒட்டிக்கொள்ளும். இந்நோய் டிக்கா நோய் தோன்றியதும் அதாவது விதைத்த 40-45 நாள்களில் உண்டாகும்.

பூஞ்சான விதைகள் காற்றின் மூலமும் தண்ணீர் மூலமும் எடுத்துச் செல்லப்பட்டுமிக வேகமாக இந்நோய் பரவவல்லது. சிறிது குறைந்த வெப்பமும் அதிகமான காற்றின் ஈரப்பதமும் இந்நோய் வேகமாகப் பரவ உதவுகின்றன. தமிழ்நாட்டில் இப்பொழுது பயிரிடப்படும் ரகங்கள் எல்லாவற்றிலும் இந்நோய் தோன்றுகிறது. மானாவாரியிலும் இறவைப் பயிரிலும் இந்நோய் காணப்படுகின்றன. இந்நோய் 50 சதம்வரை மகசூலைக் குறைக்கவல்லது.

**நோய் தவிர்த்தல் :**

டிக்கா நோயைப்போலவே துருநோயை ஓரளவு தவிர்ப்பதற்குத் தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குள் மணிலாவை விதைத்துவிட வேண்டும். இவ்வாறு விதைத்த மணிலாவைக் குறைந்த அளவே துருநோய் தாக்குகிறது. இதற்குப் பிறகு ஆகஸ்டு மாதத்தில் விதைத்த மணிலாவில் நோய் மிகுதியாகிறது.






**நோய்த் தடுப்பு முறை :**

இந்நோயைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு டைத்தேன் எம். 45 (600 கிராம்) கரையும் கந்தகம் (0.2 கிலோ) தாமிரக்கொல்லி மருந்து (600 கிராம்) விட்டாவாசிஸ் (300 கிராம்) ஆகிய பூஞ்சானக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 300 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 45-ஆம் நாளிலும் 60-ஆம் நாளிலும் தெளிக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட முதல் மூன்று பூஞ்சானக் கொல்லிகள் டிக்கா நோயையும் கட்டுப்படுத்த வல்லது.

**மணிலாவின் முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறைகள் :**

மணிலாவின் முக்கிய நோய்கள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி நல்ல மகசூலைப் பெற கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த முறைகளை கையாள வேண்டும்.

(1) விதைநேர்த்தி: விதைக்குமுன் ஒரு கிலோ விதைக்கு, திராம் 4 கிராம் வீதம் கலந்து விதைக்க வேண்டும். இது வேர் அழுகல் மற்றும் தூர் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்தி நல்ல செடி நெருக்கம் இருக்க வகை செய்கிறது. இதனால் மகசூல் அதிகரிக்கிறது.

(2) பயிரில் மருந்து தெளித்தல்:

விதைத்த 45-ஆம் நாளிலும், 50-ஆம் நாளிலும் கீழ்க்கண்ட மருந்துகளில் ஏதாவது ஒன்றைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| டைத்தேன் எம். 45 | ஏக்கருக்கு | 600 கிராம் |
| கரையும் கந்தகம் | ,, | 1200 கிராம் |
| தாமிரப்பூசணக்கொல்லி | ,, | 600 கிலோ |
| கந்தகத்தூள் | ,, ... | 10 கிலோ |

இவைகள் டிக்கா நோயையும் துருநோயையும் கட்டுப்படுத்த உதவும்.

எள்:

சாம்பல் நோயும் (Powdery Mildew), ஆல்டெர்நேரியா என்னும் இலைநைவுப் புண் நோயும் எள்ளைத் தாக்கும் மிக முக்கிய பூஞ்சான நோய்கள். இந்நோய்கள் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. இவைகள் 20 முதல் 30 சதம் வரை இவ்விருநோய்களுக்கும் இம்மகசூலைப் பாதிக்கின்றன. நம் மாநிலத்தில் பயிரிடப்படும் எல்லா எள் ரகங்களும் இவ்விரு நோய்களுக்கும் இலக்காகின்றன. இவ்விரு நோய்களையும் கட்டுப்படுத்தி எள் மகசூலை வெகுவாக அதிகப்படுத்த முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# நீலகிரியில் பொன்நிற நூற்புழுக் கட்டுப்பாட்டுத் திட்டம்

உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வரும் பல நாடுகளில் கோல்டன் நெமடோட் (Golden Nematode) எனப்படும் பொன்னிற நூற்புழு கடுமையான சேதத்தை விளைவித்து வருகிறது.

இந்நூற்புழு முதன் முறையாக இந்தியாவில் நீலகிரி மாவட்டத்தில் 1961-ஆம் ஆண்டு பேராசிரியர் ஜோன்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பொன்னிற நூற்புழு ஆராய்ச்சி நிலையம் 1964-ஆம் ஆண்டு நீலகிரியில் உதகமண்டலத்தில் ஆரம்பிக்கப்பட்டு 1967-ஆம் ஆண்டு இந்திய ஜெர்மானிய நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1965-ஆம் ஆண்டில் நீலகிரியில் 800 ஏக்கர் நிலத்தில் இப்புழுவின் தாக்குதல் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. படிப்படியாக இப்பொன்னிற நூற்புழுவின் தாக்குதல் விதைக் கிழங்குகளின் மூலமாகவும், ஓடும் தண்ணீர், காற்று, விவசாயத்திற்குப் பயன்படுத்தும் கருவிகள், கால்நடைகள் மூலமாக இதர நிலங்களுக்குப் பரவி தற்சமயம் சுமார் 2,600 எக்டேர் நிலத்தில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நூற்புழு பாதிக்கப்பட்ட நிலங்களில் கிழங்குப் பயிரின் செடிகள் பகலில் வெயிலில் வாடியும், ஆணி வேர் வளர்ச்சியடையாமலும், கிளை வேர்கள் அதிகமாகவும் காணப்படும். தாக்கப்பட்ட வெண்ணிற முட்டைக் கூடுகள் காணலாம். இம்முட்டைக் கூடுகள் முதிர்ச்சியடைந்த பின் மண்ணில் விழுந்து விடுகிறது. இப்பொன்னிற நூற்புழு தாக்கப்பட்ட நிலத்தில் மகசூல் 80 சதவிகிதம் வரை குறையும். நூற் புழுவைக் கட்டுப்படுத்தக் கையாளும் முறைகள்:

நீலகிரியில் நூற்புழு தாக்கப்பட்ட நிலங்களில் 1971-ஆம் ஆண்டு முதல் 1976 வரை 5,600 ஏக்கர் நிலத்தில் டாசனிட் 10 சதவிகித குருணை மருந்து இந்திய ஜெர்மானிய நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தினரால் போடப்பட்டது. இதனால் உருளைக் கிழங்கின் மகசூல் அதிகரித்ததோடல்லாமல், நூற்புழுவின் தாக்குதல் சுமார் 80 சதவிகிதம் வரை குறைந்துள்ளதாக ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வந்தது.

தொடர்ந்து நடத்தப்பட்டுவந்த ஆராய்ச்சிகளின் வாயிலாக டெமிக் 10 சத குருணை மருந்தை ஏக்கர் ஒன்றுக்கு 8 கிலோ வீதம் நடவின் போது பார்களில் இடுவதால் நூற்புழுவின் தாக்குதலைக் குறைத்தும், மகசூலை அதிகரித்தும் உள்ளது. இம்முறையில் டெமிக் மருந்தை உருளைக்கிழங்கிற்கு இடுவதால் ஒரு ஏக்கருக்கு ரூ.210 தான் செலவாகும்.

இது தவிர, ப்யூரடான் ப்ளோபன் 40 சதம் (Furadan Flowable) என்ற மருந்தின் கரைசலில் விதைக் கிழங்குகளை மூன்று நிமிடங்கள் ஊற வைத்து நடவு செய்வதன் மூலம் நூற்புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

நூற்புழு தாக்கப்பட்ட நிலத்திலிருந்து விதைப்பதற்கு எடுத்த விதைக் கிழங்குகளை, நூற்புழு தாக்கப்படாத நிலத்திற்கு விதைப்பதற்கு எடுத்துச் செல்லுமுன் 'மிதைல் புரோமைடு' (Methyl Bromide) என்ற மருந்தை (காற்றுப்பட்டால் ஆவியாகும்) ஒரு டன் விதைக் கிழங்கிற்கு 60 மில்லி மருந்து என்ற விகிதத்தில் காற்றுப்புகாத தார்ப்பாயினுள் 5 மணி நேரம் வைத்திருப்பதன் மூலம், கிழங்குகளின் மீது ஒட்டியுள்ள முட்டைக்கூடுகள் கொல்லப்படுகின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் தரப்பட்டு வருகிறது.

இதுபோலவே 'கால்சியம் ஹைப்போ குளோரைடு (Calcium Hypochlorite) 9 சதவிகித கரைசலில் விதைக் கிழங்குகளை 30 நிமிடங்கள் ஊறவைத்து எடுத்து விதைப்பதன் மூலம், விதைக் கிழங்குகளின்மீது ஒட்டியுள்ள நூற்புழுவின் முட்டைக் கூடுகள் முழுமையாகக் கரைக்கப்பட்டு விடுகிறது என்பதும் தற்சமயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்ந்து ஆராய்ச்சியில் இருந்து வருகிறது.

எனவே, உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் நீர் போகம், கார்போகப் பருவங்களில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும்போது டெமிக் 10 சத குருணை மருந்தை நடவின்போது பார்களில் ஒரு ஏக்கருக்கு 8 கிலோ வீதம் இட்டும், கடைபோகத்தில் பயிர் சுழற்சியைக் கைப்பிடித்து தானியப் பயிர்களையோ அல்லது காய்கறிகளையோ பயிரிடுவதன் மூலமும், விதைக்கிழங்குகளை வாங்கும்போது வேளாண்மைத் துறையின் ஆலோசனையைக் கேட்டும், பொன்னிற நூற்புழுவைக் கட்டுப்படுத்த ஈடுபட்டால் நீலகிரியில் உருளைக்கிழங்கு உற்பத்தி பெருகி நம் மாவட்டத்தில் வேளாண்மை வளம் செழிக்கும் என்பது உறுதி.

# மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
# மேலுரமிட மேன்மையான உரம்
# ஸ்பிக் யூரியா




* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46.2%
* மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய, ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

CAS SPIC 4 TM 77

சிறப்பான யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.



# சந்தனத்தின் கதை

குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்திருக்கின்றனர் நமது முன்னோர். இதன் காரணமாகத் தான் உலகம் 'நானிலம்' என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு நிலங்களிலும் காடும், காடு சார்ந்த பகுதிகளும் 'முல்லை' என வழங்கப் பெறுகின்றன.

நமது தமிழகத்தில் 'முல்லை' நிலப் பகுதிகள் செழிப்பாக உள்ளன. தமிழகத்தில் கான் வளம் அதிகம். இதை உணர்த்தும் வகையில்தான், பாவேந்தர் பாரதிதாசன் தனது நாட்டுப் பாடலில்,

அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அமைவாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நஞ்சை
முல்லைக் காடு மணக்கும் நாடு

என்று பாடியுள்ளார்.

பாவலர்களாலும், புலவர்களாலும் போற்றப்பட்டு வரும் வனச் செல்வமான 'சந்தனத்'தின் பெருமையை இக்கட்டுரை கூறுகிறது.

கட்டபட்லா

பகர்தாத்

ஜஜ்போக்கல்

அனிபெக்கர்

செரியா

சாரிட்ருட்

இவையெல்லாம் என்ன? சுவையான இனிப்புப் பண்டங்களா ? இல்லை! 'கமகம' வென மணம் தரும் சந்தன மரத்தின் திருநாமங்களே இவை!

**சந்தனத்தின் மகிமை**

சந்தனத்தின் மகிமையைச் சொல்லிக் கொண்டே போகலாம். அது மணத்துக்கு மட்டுமல்ல, மருந்துக்கும் பயன்படுவதை நாம் பார்க்கிறோம். வேனல் கட்டி, வேர்க்குரு போன்றவற்றுக்குச் சந்தனம் நல்ல மருந்தல்லவா ? ஏந்தெழில் மிக்க ஏந்திழையைச் சந்தனச் சிலை என்கிறோம் ; சந்தன நிறம் என்கிறோம். பூவோடு நார் சேர்ந்தாற் போல, சந்தன மரத்தோடு சேர்ந்த மற்ற மரங்களும் மணம் பெறும் என்று நீதி வெண்பா கூறுகிறது. ''சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங் கமழும்'' என்கிறது அது.

'அரைக்கினும் சந்தனம் தன் மணம் குன்றுது அல்லவா? திருமணத்தில், விழாக்காலங்களில், பூசை வேளைகளில் சந்தனம் நமக்குப் பயன்படும் ஒரு முக்கிய பொருளாக—புனிதப் பொருளாகத் திகழ்கிறது.

பட்டு வேட்டியும், பட்டுச் சட்டையும் அணிந்து கொண்டு, நெற்றியில் ஒரு சிறு சந்தனப் பொட்டு இட்டால் போதுமே! அதன் அழகே தனி அல்லவா?

கோடைக் காலத்தில் நம் கை வசம் நல்ல சந்தனம் இருந்தால் போதுமே, கொடைக்கானலையே நம் வீட்டுக்குக் கொண்டு வரலாமே!

**சந்தனத்தின் கதை . . .**

மனத்துக்கு இன்பமூட்டி நம்மை மகிழ்விக்கும் மணக்கும் சந்தனத்துக்கும் ஒரு கதை உண்டே!

தமிழ்நாட்டில் வனத் துறையின் கீழுள்ள காட்டின் மொத்தப் பரப்பளவு 20,844 சதுர மீட்டராகும். இதில் 17,300 சதுர கிலோ மீட்டர் ஒதுக்குக் காடாகவும், எஞ்சிய 3,544 கிலோ மீட்டர் ஒதுக்கு நிலமாகவும் உள்ளது.

இயற்கை வளம் மிக்க காடுகள் இன்றியமையாத பல செல்வங்களை நமக்கு வாரி வழங்குகின்றன. அவற்றுள் ஒரு முக்கிய பொருளாகத் திகழ்வது சந்தன மரம்.

இயற்கைச் சந்தன மரங்கள் வடார்க்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் மாவட்டங்களில் வளர்கின்றன. மேலும், திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலைக் குன்றுகளிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அழகர் கோயில் பள்ளத் தாக்கிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றால மலையிலும் சந்தன மரங்கள் வளர்கின்றன. மதுரை மாவட்டத்தில் சிற்சில இடங்களில் சந்தன மரங்கள் காணப்படுகின்றன.

**ஜவ்வாது மலையில் . . .**

தமிழ்நாட்டில் சந்தனக் கட்

டைகள் மிகுதியாகக் கிடைப்பது, வடார்க்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையில்தான். திருப்பத்தூரையும், வேலூரையும் தலைமை இடங்களாகக் கொண்டு உள்ள இரண்டு கோட்டங்களின் கீழ் ஜவ்வாது மலை வருகிறது.

வேலூர்க்கோட்டத்தில் சந்தன மரக் காடுகளின் பரப்பு அளவு 21,653 எக்டேரும், திருப்பத்தூர்க் கோட்டத்தில் 65,144 எக்டேரும் ஆகும். ஆக, ஜவ்வாது மலையில் உள்ள சந்தன மரக்காட்டின் மொத்தப் பரப்பு 85,000 எக்டேர் ஆகும்.

இந்த இரண்டு கோட்டங்களிலிருந்தும் 1974-75 முதல் 1976-77 முடிய ஏலத்தில் விற்கப்பட்ட சந்தனக் கட்டைகளின் அளவும், கிடைத்த வருவாயும் வருமாறு :

1974-75ல், 721 டன், ரூ. 3,72,81,000. 1975-76ல், 1,185 டன், ரூ. 2,41,92,000. 1976-77ல், 1,450 டன், ரூ. 5,73,23,000.

**வருவாயில் முதன்மை!**

வனச் செல்வங்களில் சந்தன மரம் முக்கிய இடம் பெறுவது போல, வருவாயிலும் அது முதன்மை பெற்று வருகிறது. ஆண்டுதோறும் சுமார் 1,500 டன் சந்தனக் கட்டைகள் ஏலத்தில் விற்கப்பட்டு ரூ. 5 கோடிக்கும் மேலாக வருவாய் வருகிறது. சந்தனக் கட்டைகள் திருப்பத்தூர், சத்தியமங்கலம் ஆகிய இடங்களிலுள்ள அரசுக் கிடங்குகளில் ஏலம் விடப்படுகின்றன.

**சந்தனத் தைலம்!**

சந்தன மரங்களில் சுமார் 16 வகைகள் உள்ளன. இவற்றில் உயர்ந்த வகையைச் சேர்ந்தவை கட்பட்லா (Ghat Badla), பக்ரதாத் (Bagradad) சந்தனக் கட்டைகளாகும். இவற்றின் தற்போதைய மதிப்பு டன் ஒன்றுக்கு 88,000 ரூபாயாகும்.

சந்தனக்கட்டையினை ஏலத்தில் விற்பதற்குப் பதிலாக, சந்தனத் தைலம் தயாரிக்கும்தொழிற்சாலை ஒன்றினை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் தொழிற்சாலை வடார்க்காடு மாவட்டத்தில் அமையும். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அடுத்த ஆண்டு மத்தியில் உற்பத்தி தொடங்கும் சந்தன மரத்திலிருந்து கழிக்கப்படும் பகுதிகள் (Sap Wood) ஊதுவத்தி முதலான வாசனைப் பொருட்கள் செய்யப்பயன்படும்.

**செயற்கை முறையில் . . .**

வனத் துறையின் வருவாயில் 40 சதவீதத்திற்கும் மேல் சந்தன மர விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மரம் மேலும் வளம் கொழிக்க, தக்க இடங்களில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டில் 8.43 இலட்சம் ரூபாய் செலவில் 200 எக்டேர் பரப்பில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்ப்பு மற்றும் இயற்கைச் சந்தனக் காடுகளில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

1978-79ஆம் ஆண்டில் 169 எக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்ப்பும், மற்றும் 840 எக்டேரில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ள ரூ. 10.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கடத்தலைத் தடுக்க . . .**

அழகு இருக்கிற இடத்திலே ஆபத்தும் இருக்கும் என்பார்கள். அதைப் போல, அதிக விலை மதிப்பு வாய்ந்த பொருளுக்கும் ஆபத்து இருப்பது இயல்புதானே? ஆம். விலை மதிப்பு மிக்க சந்தன மரக் கட்டைகள் கடத்தப்படுவதை அடிக்கடி நாம் செய்தித் தாள்களில் படிக்கிறோம். அதனால் அரசுக்குப் பெருமளவு இழப்பு ஏற்படுகிறது.

ஆகவே, சந்தன மரக் காடுகளைச் சீரிய முறையில் பாதுகாத்திட, தற்போதுள்ள நிர்வாக அமைப்புக்களைத் தக்கவாறு மாற்றியமைத்து, திருவண்ணாமலையில் இதற்கென தனியே ஒரு கோட்டத்தினை ஏற்படுத்தவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இத்திட்டம், கோவை வட்டத்திலும் சந்தன மரப் பகுதிகளைக் காக்கக் கூடுதலாகக் காப்பு ஆட்கள் நியமிக்கத் தனி இயங்கு குழுக்களை ஏற்படுத்தவும், வாகனங்கள் போன்ற போக்குவரத்து வசதிகளைத் தரவும், ஆயுதங்கள் வழங்கவும் வகை செய்கிறது.

**வெள்ளையரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திய தீரர் திப்புசுல்தான், நாட்டின் வளத்தினைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறை காட்டினார். வேளாண்மையே நாட்டின் உயிர்நாடி என்பதை அவர் வலியுறுத்தினார். நாட்டின் செல்வச் செழிப்புக்கான பயிர்களை வளர்க்க வேண்டும் என்பதிலே மிகவும் கண்டிப்பாக இருந்தார்.**

**தம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு 1788-ஆம் ஆண்டில் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். 'கரும்பு, கமுகு, தென்னை ஆகியவைகளைப் பயிரிட்டு வளர்ப்போருக்கு வரிச் சலுகை காட்டுவதாகவும் உள்நாட்டுத் தேவைக்காகவும் வெளிநாட்டு ஏற்றுமதிக்காகவும் தேக்கு, சந்தன மரங்கள் முதலியவைகளைப் பயிரிட வேண்டும்; அவைகளை மிகவும் கவனத்துடன் பாதுகாத்து வரவேண்டும்' என்றும் கட்டளை பிறப்பித்தார்.**

**கடத்தலின் கதை!**

சந்தன மரங்கள் எப்படிக் கடத்தப்படுகின்றன?

கடத்தல்காரர்களின் கையாட்கள் கட்டைகளைத் திருடி காடுகளில், மலைப் பகுதிகளில், குளத்தில், ஆற்றங்கரைகளில், கிணற்றில், சாலையோர வயல்களில் மறைத்து வைக்கின்றனர். அங்கிருந்து அவை பழக்கூடையாகவும், உதிரிப் பொருட்கள் வடிவிலும் பொய்யான அடையாளத்துடன் வெளியே வருகின்றன. பிறகு, அவை கார்கள் மற்றும் ரயில்கள்



மூலமாக திருச்சி, சென்னை, திருச்சூர், கள்ளிக்கோட்டை, ஐதராபாத், கல்கத்தா முதலிய இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சில நேரங்களில் சில மனிதர்களால் சந்தன மரம் படாதபாடு படுகின்றது! அது சிறு கட்டைகளாக வெட்டப்பட்டு, துணி மூட்டை போன்று காட்சி அளிக்கும்! அந்த மூட்டைகள் சரக்கு வண்டிகள் மூலமாக திருச்சூர், மைசூர், பம்பாய், திரிபுரா போன்ற வடகிழக்கு எல்லையோரப் பகுதிகளுக்குப் பயணம் செய்கின்றன!



**விழிப்புடன் செயலாற்று . . .!**

ஆகவே, கடத்தலைத் தடுக்கப் பணியாளர்களை விழிப்பாக இருக்கும்படியும், சரக்கு வண்டிக் கிடங்குகளை அடிக்கடி கண்காணிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வனத்துறை அமைத்த 'சந்தன மர ஆய்வுக் குழு' தந்த கருத்தின் அடிப்படையில், கடத்தல் பற்றித் தகவல் தருவோருக்குத் தாராளமாகப் பரிசு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.



சேலம் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 65 டன்கள் சந்தனக் கட்டைகள் சம்பந்தப்பட்ட 745 வனக் குற்றங்கள், வனத் துறைச் சிப்பந்திகளால் கண்டு பிடிக்கப்பட்டனவாம்.





கடந்த இரண்டு ஆண்டுகளில் இங்கு 19 அம்பாசிடர் கார்கள் கைப்பற்றப்பட்டனவாம்.

**காடுகளைக் காத்திட . . .**

விலை மதிப்புள்ள சந்தன மரக் காடுகளைக் காப்பதற்கென்றே சேலம், தர்மபுரி, வேலூர், திருப்பத்தூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையகமாகக் கொண்டு ஏழு இயங்கு குழுத் தனிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இக்குழுக்கள் சந்தன மரம் நிறைந்த காட்டுப் பகுதிகளில் அங்குமிங்கும் சுற்றி, சந்தன மரம் திருடுவோரைக் கையும் களவுமாகப் பிடிக்கின்றன. இத்துடன்கூட வனச் சோதனைச் சாவடிகள், மற்றத் துறைகளைச் சார்ந்த சோதனைச் சாவடிகள் ஆகியவையும் சந்தன மரக் களவையும், கடத்தலையும் கண்காணிக்கின்றன. அதோடு காவல் துறையின் உதவியும் பெறப்பட்டு உள்ளது.

சந்தன மரக் கடத்தல் குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கிட, திருத்திய வனச் சட்டத்தில், மூன்று ஆண்டுகள் கடுங்காவல் அல்லது 10,000 ரூபாய் அல்லது இரண்டும் விதிக்க வகைசெய்யப்பட்டுள்ளது.

எனவே, காடு வளர கை கொடுப்பதை விடுத்து, ''கை வரிசை''யைக் காட்டுவது நல்லதல்லவே! நம்முடைய நலம் நாடும் நல்லரசுக்கு, நல்லாதரவு நல்கினால்தானே நாடு வளம் பெறும், வீடும் நலம் பெறும்!

# விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளைவிக்கும் எதிரி—

# எலி



## எலித்தொல்லையை அறவே நீக்க ஒரே வழி

# ரோடாஃபாரின்

## (ஆன்டிகோவாகுலண்ட்)

மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணம் எலிகளின் நாசவேலைதான். எலிகள் விவசாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல்லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவதால், அவை பயனற்றுப் போகின்றன. இந்நிலையில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலிகளை அறவே ஒழிக்க வல்ல ரோடாஃபாரினைத் தயாரித்திருக்கிறார்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல்லும் மருந்தல்ல. அதுவேலை செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறையாவண்ணம் செய்து, மெதுவாக ஆனால் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடாஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க்காமல், உட்கொண்ட மூன்றாம் நாளிலிருந்து இறக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலிகள் 24 மணி நேரத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன. ஆனால் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர்களாலோ, வளர்ப்புப் பிராணிகளாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளைவிக்காது.




ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலைத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக, லட்சத் தீவில் ரோடாஃபாரின் உதவியுடன் எலிகளை முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளைச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

**ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி.**
**விவசாயிகளின் நண்பன்.**

*உலகெங்கும் வார்ஃபாரின் என்ற மறுபெயர் கொண்டது.

**pci பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,**

28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னை 600 001.
தொலைபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641 018.
தொலைபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53,
அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலைபேசி எண். 30440.

---

**pci பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்**

*சேமித்து வைத்திருக்கும் தானியங்களை பூச்சிபூண்டுகளின் தொல்லையிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க.*

**எங்கும் கிடைக்கிறது.**

FDS PCI 2750 TAM



# பறவைகளே! பறவைகளே!

பறவை இடம் பெயர்தல் அல்லது வலசை போதல் பறவை உலகத்தில் ஒரு வியப்புக்குரிய நிகழ்ச்சி. இதில் விளக்கம் பெரு பல அம்சங்கள் பரம இரகசிய மாகவே இருந்து வருகின்றன.

ஆண்டிற்கொரு முறை பல்லாயிரக் கணக்கில் பலவிதப் பறவைகள் குளிர்காலத்தில் வடக்கேயிருந்து தெற்கே வந்து தங்கி. அதே பறவைகள் கோடை ஆரம்பிப்பதற்கு முன் வடதேசங்களுக்குச் செல்கின்றன.

பரந்த கடல்களுக்கு மேலும், உயர்ந்த மலைகளுக்கு மேலும் பல ஆயிரம் மைல் தூரத்திற்கு இவ்விடப் பெயர்ச்சி நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பிரதேசத்திலிருந்து மற்றொரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குச் சென்று திரும்பி வருதல், வரும் நேரம், இடம் முதலியவை சிறிதும் மாறுவதில்லை. திட்டவட்டமாகச் சொல்லக் கூடியதாக இருக்கின்றன. எந்த இடத்திலிருந்து கிளம்பியதோ கிட்டத்தட்ட அதே இடம் அல்லது தோட்டம் அல்லது நீர் நிலைகளுக்குத் திரும்பி அடைகின்றன.

இப்பயணம் மேற்கொள்ள அவற்றைத் தூண்டுவது எது? ஏன் இவ்வித ஆபத்துக்கள் நிறைந்த பயணம்? எந்த மார்க்கங்களில் போக வேண்டும், எவற்றின் வழி திரும்ப வேண்டும் என்று எப்படி அவைகளுக்குத் தெரிகிறது?

பறவைகளைப் பிடித்து வளையங் கட்டிவிடுதல் சோதனைச்சாலையில் ஆராய்ச்சி நடத்துதல் முதலியவற்றால் பல உண்மைகளை அறிந்திருக்கின்றோம். எனினும் அடிப்படைக் கேள்விகளுக்கு முழுத் திருப்தி தரும் பதில் இன்னும் கிட்டவில்லை.

வடகோளத்தில் கூடு கட்டி குஞ்சு பொரித்த இடங்களிலிருந்து இறை தேடி உண்ண தெற்கு நோக்கி வருகின்றன. தென் கோளத்தில் தாங்களே குறிப்பிட்ட இடங்களில் தங்கியிருந்து மறுபடியும் வடபிரதேசங்களில் குளிர் ஓய்ந்து பணி உறையும் காலத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று விடுகின்றன. இம்மாதிரி வடக்கே இனப் பெருக்கம் தெற்கே வந்து தங்கிச் செல்லும் பறவையினங்கள், வரித்தலை வாத்து, சிறவி ஜாதிகள், வாத்து இனங்கள் முதலிய தண்ணீர்ப்பறவைகளும், வயிரி வம்சத்தைச் சேர்ந்த ஹாரியர் (Horrier) என்ற பறவைகளும் டெர்ன் (Tern) என்று சொல்லப் படும் பலவித கடற்கரைப் பறவைகளும், சில வாலாட்டிக் குருவிகளும், தமிழ்நாட்டிற்கு கிழக்கு ஐரோப்பா மற்றும் இரஷ்யப் பகுதிகளிலிருந்து வந்து போகின்றன.

ஆர்டிக் டெர்ன் (Arctic Tern) என்னும் வடதுருவ கவிட்டை வரல் வடதுருவத்திலிருந்து தென்துருவத்துக்கும், தென் துருவத்திலிருந்து வட துருவத்துக்கும் ஆண்டுதோறும் 35,000 கிலோ மீட்டர் தூரம் பறக்கிறது தமிழ்நாட்டில் முகவரி எழுதிய அலுமினிய மோதிரங்கள் இட்ட காட்டு வாத்துக்கள் சில 4,800 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் சைபீரிய நாட்டில் பிடிபட்டிருக்கின்றன.

இவ்வித நீண்ட தூர இடப் பெயர்ச்சி ஆரம்பிப்பதற்குப் பல நாட்களுக்கு முன்பே அதிக உணவை உட்கொண்டு உடலில் கொழுப்புச் சத்தைச் சேர்த்துக் கொள்கின்றன. பறந்து செல்லும் பல நாட்களின் போது இவ்வாறு சேர்த்து வைத்த கொழுப்பே சக்தி அளிக்கிறது.

பகலில் சூரியனின் திசையும் இரவில் விண்மீன்களுமே திசையறியும் கருவிகளாகப் பயன் படுத்தப்படுகின்றன என்று ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது. இப்பயணிகள் சுமார் 600 மீட்டர் முதல் 1300 மீட்டர் உயரத்தில் பறந்து செல்வதால் தரையிலுள்ள குறிகளை அவைகள் அவ்வளவாகப் பயன்படுத்த முடியாது என்று தெளிவாகிறது.

இது தவிர இவ்வாறு கண்டம் விட்டுக் கண்டம் போகும் பயணம் தவிர மலை உச்சியிலிருந்து கீழும் குறிப்பிட்ட இடங்களிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் குறிப்பிட்ட இடங்களுக்கும் சில பறவையினங்கள் இடப்பெயர்ச்சி செய்கின்றன.



# அஞ்சலக இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

## மத்திய, மாநில அரசு ஊழியர்களை

## அழைக்கிறது

5 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள்
அஞ்சலக இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் ஏற்கெனவே இன்ஷ்யூர் செய்துள்ளார்கள்.

**அதற்குக் காரணம்:**

- குறைந்த பிரிமியம், ஓராண்டுப் பிரிமியத் தொகையை முன்பணமாகச் செலுத்துபவர்களுக்குத் தள்ளுபடி உண்டு.
- அதிக போனஸ் அளிக்கப்படுகிறது (தற்சமயம் அறக்கட்டளைகள், தனிப் பட்டவர்கள் ஆகியோரின் இன்ஷ்யூர் தொகைக்கு ரூபாய் 100—க்கு ஆண்டு ஒன்றுக்கு முறையே ரூ. 25, ரூ. 33 வீதம் வழங்கப் படுகிறது.
- பிரிமியத் தொகை சம்பளப் பட்டியலிலிருந்தும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

  ரொக்கமாகவும் பெற்றுக் கொள்ளப்படுகிறது.
- வருமான வரியில் தள்ளுபடி பெறுவதற்குரிய தகுதி பிரிமியம் செலுத்து வோருக்கு உண்டு.
- கடன் தொகைகள், கோரிக்கைத் தொகைகள் விரைவில் வழங்கப் படுகின்றன.

உங்களது பாலிசிக் கணக்கு—
நீங்கள் பணிபுரியும் மாநில அஞ்சல் துறைத் தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது.

நீங்கள் மாற்றல் ஆகும்போதெல்லாம்
உங்கள் மாநில அஞ்சல்துறைத் தலைவருக்குத் தயவுசெய்து தகவல் கொடுங்கள்.

உங்களது குடும்பத்தினரின்
பாதுகாப்பிற்காகவும்
முன்னேற்றத்திற்காகவும்
அஞ்சல் இன்ஷ்யூரன்ஸ்
திட்டத்தில் சேருங்கள்.

மேலும் விவரங்கள் அறிந்து கொள்ள
உங்கள் மாநில அஞ்சல்துறைத்
தலைவருக்கு எழுதுங்கள் அல்லது
அவருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

''உட்காக்'' என்னும் காட்டுக் கோழி இமயமலைச்சாரலில் கூடு கட்டிப் பெருகி தமிழ்நாட்டில் நீலகிரி, கொடைக்கானல், வந்து திரும்புகின்றன. அவ்வாறே ''இந்தியன் பிட்டா'' என்ற காசிக்கட்டுக்குருவி இமயமலைச் சாரலிலிருந்து குளிர் மலைக்காலங்களில் நமது தமிழ்நாட்டில் கடற்கரையோர மாவட்டங்களுக்கு வந்து தங்கிவிட்டு மறுபடியும் வடக்கே செல்கின்றன. இவ்வினத்திய பெருங்கூட்டங்கள் இலங்கைத் தீவுக்கும் சென்று திரும்புகின்றன. செங்கால் நாரை அல்லது பூநாரை என்ற பெரிய பறவை கூடுகட்டிக் குஞ்சு பொரிப்பது குஜராத்தைச் சேர்ந்த கச்சுப் பகுதியில் இவை ஆயிரக் கணக்கில் ''புலிகாட்'' ஏரிச்சார்பிலும், வேதாரண்யத்திற்கு அருகிலும் ஆண்டுதோறும் தங்கியிருந்து பின் செல்லுகின்றன.

இக்குறுகிய வரலாற்றினின்று பறவையின இடப்பெயர்ச்சி எவ்வளவு வியக்கத்தக்க இயற்கை நிகழ்ச்சி என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

பறவையினங்களில் இடப் பெயர்ச்சி அல்லது வலசை போகுதல் என்ற வியக்கத்தக்க









# வனவிலங்கு வார விழா!

வனவிலங்கு வார விழா இவ்வாண்டு அக்டோபர் முதல் வாரத்தில் கொண்டாடப்படுகிறது. வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் பற்றி பொதுமக்களிடையே பரப்புவதை மையக் கருத்தாகக் கொண்டு இவ்விழா கொண்டாடப்படுகிறது.

வனவிலங்கு வார விழாவின்போது வனவிலங்கு சம்பந்தமாக நடக்கவிருக்கும் அறிவு விளக்கப் பணிகள் விழாவின் முக்கிய அம்சமாகும். பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் கீழ்க்கண்ட வனவிலங்கு பாதுகாப்பு உறுதி மொழியை இந்த வனவிலங்கு வார விழாவின்போது எடுத்துக் கொள்வார்கள்.



**உறுதிமொழி :**

''மனித நாகரிகத்திற்கு அடித்தளமாக உள்ள இயற்கையின் படைப்புகளைப் பாதுகாப்பதிலுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து, அழிந்து கொண்டிருக்கும் வன விலங்குகளைப் பாதுகாப்பதிலும், குறைந்துகொண்டு வரும் காட்டு வளத்தைப் பாதுகாப்பதிலும் முயற்சி எடுப்பேன் என உறுதி கூறுகிறேன்."



ஆண்டுதோறும் நடக்கும் நிகழ்ச்சியைப் பற்றி இரண்டுவித ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

ஒருவித ஆராய்ச்சி கிளம்பும் இடம், பயணவழி, தங்குமிடம், திரும்பிச் செல்லும் வழி, போய்ச் சேருமிடம் முதலியவற்றைப் பற்றியது.

இரண்டாவது வித ஆராய்ச்சி காலா காலத்தில் பயணம் மேற்கொள்ளத் தூண்டுவது எது, எவ்விதமாக அவை ஒரே திசையைக் கையாண்டு வழக்கமான இடங்களை அடைகின்றன என்பது பற்றியுமாகும்.

முதற்சொன்ன ஆராய்ச்சி, பறவைகளை வலைகளாலும் பொறிகளாலும் பிடித்து, அவைகளின் உருவத்திற்கேற்ப செய்து வைத்த அலுமினியம் தகடுகளாலான மோதிரங்களை ஒருவிரலில் மாட்டிவிட்டு விடுதல்; இம்மோதிரங்களில் வரிசை எண்ணும், மோதிரமிட்ட குழுவின் சுருக்கெழுத்தும், பிடி பட்டால் தெரிவிக்க வேண்டிய முகவரியும் பொருத்தப்பட்டிருக்கும்.

**Bombay Natural History Society** குழுவினரால், நடத்தப்பட்ட பறவையின இடர்ப்பெயர்ச்சி ஆராய்ச்சியில் *160* **BNHS —Reports to BNHS Bombay** என்று குறிப்பிருக்கும். முதல் குறித்த நம்பரிலிருந்து ஆவணங்களைப் பரிசோதித்தால் எந்த தேதியில், எந்த இடத்தில், எந்த இனப் பறவை பிடிக்கப்பட்டு, மோதிரமிட்டு விடப்பட்டது என்று விளங்கும்.

இவ்வாறு மோதிரமிட்டு விடப்பட்ட பறவைகள் பயணத்தின் போதோ அல்லது பயணம் முடிந்த பிறகோ அல்லது திரும்பி வரும் பொழுதோ அல்லது பல காலங்களுக்குப் பிறகோ பிடிபடும்; அல்லது சுடப்படும். கண்டு எடுத்த மோதிரத்திலிருந்து வேண்டிய முகவரிக்குத் தெரிவித்தால் ஆவணங்களிலிருந்து அந்தப் பறவையின் பயண வரலாறு அறியலாம்.



இவ்வாறு **Bombay Natural History Society** ஆராய்ச்சிக் குழுவினரால் மோதிரமிட்டு அனுப்பிய பறவைகளில் பல பறவைகள் இரஷிய நாட்டில் பிடிபட்டிருக்கின்றன. இவ்வித ஆராய்ச்சிக் குழுக்கள் பல மேற்கத்திய நாடுகளிலும் இரஷ்யாவிலும் நமது நாட்டிலும் ஆராய்ச்சி நடத்திக் கொண்டு வருகின்றன. இந்த வளையமிடுதல் ஆராய்ச்சியிலிருந்து தெளிவான விஷயங்களின் கோர்வையிலிருந்து பல பறவையினங்களின் பயண வரலாறு தெளிவாகிக் கொண்டு வருகிறது.

மற்றொரு ஆராய்ச்சி, பறவைப் பயணிகள் எவ்விதத் தூண்டுதலில் எவ்வாறு பயணத் திசையை நிர்ணயிக்கின்றன என்பதாகும். இதற்கு ஒரு பெரிய செயற்கைக் கோளம் ஒன்றை அமைத்து அதனுள் இயற்கை விதிக்கேற்ப, விண்மீன்கள் போன்றும் சூரிய சந்திரன் போன்றும் விளக்குகளை அமைத்தார்கள். இக்கூண்டிற்குள் சில பறவைகளையும் விடுவித்தனர். நாள்தோறும் இப்பறவைகளைக் கவனித்து, காலா காலத்தில், அவைகள் நோக்கும் திக்கும், பறக்க ஆரம்பிக்கும் திசை முதலியவைகளைக் கவனித்து விண்மீன்களையும் சூரியனையும் கொண்டே பறவையினங்கள் திசை நிர்ணயிக்கின்றன என்று கண்டுபிடித்தார்கள். இவ்வித ஆராய்ச்சியை நடத்திக்கொண்டு இருப்பவர் 'அமெரிக்கர்கள்'.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—**தந்தை பெரியார்.**



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—**பேரறிஞர் அண்ணா.**

## எங்கும் சமத்துவம் ஓங்க
## எல்லாரும் ஓர் குலம்
## எல்லாரும் ஓர் நிறை
## எனும் இலட்சியம் ஈடேற
## தொண்டாற்றுவோம்!

பதிவு எண். M. 8676

